சிற்பி



பாரதிதாசனுக்குள் பாரதி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பவ 7211

பாரதிதாசனுக்குள் பாரதி

சிற்பி பாலசுப்பிரமணியம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-434-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 391

நூல்	:	பாரதிதாசனுக்குள் பாரதி
ஆசிரியர்	:	சிற்பி பாலசுப்பிரமணியம்
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2043, புரட்டாசி முதற்பதிப்பு - செப்டம்பர் 2012
பக்கம்	:	104
அளவு	:	டெம்மி 1/8
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
படிகள்	:	1200
விலை	:	உரூ. 90.00
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
17.09.2012

அணிந்துரை

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்!

என்று நம் தமிழின் பெருமையை நமக்கு எடுத்துரைத்து,

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்று நாம் செல்ல வேண்டிய பாதையையும் காட்டியவர் பைந்தமிழ்ச் சாரதி பாரதி.

தமிழின்பால் நமக்குள்ள உரிமை, அதைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமை, அதனால் நாம் பெறும் வளமை பற்றி,

அன்னைத் தமிழ்மொழி நமது

என்றும், அது நமக்கு

ஆருயிர் எனும்படி வாய்த்த நல் அமுது

என்றும் சாசனம் எழுதித் தந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

அழியா நிலைதரும் இந்த அமுதத் தமிழ் இன்று நேற்று தோன்றியதன்று; நிலவு எப்போது தோன்றியது? கதிரவன் எப்போது தோன்றினான்? விண்ணும் மண்ணும் நட்சத்திரங்களும் கடலும் எப்போது தோன்றின? அப்போது தோன்றியது நம் தமிழ் என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். இருபதாம் நூற்றாண்டு நமக்களித்த இந்த இரட்டைக் கவிஞர்கள் இனிவரும் நூற்றாண்டுகளிலும் தமிழுக்கு அறங்காவலர்கள். நாட்டையும் மொழியையும் இரு கண்களாய்க் கொண்டவர்கள். எங்கே தமிழ் இகழப்பட்டது? எங்கே தமிழின் நலம் கெடுக்கப்பட்டது? அங்கெல்லாம் புயலாய்க் கிளம்பிப் போரிட்டவர்கள். தெய்வத்தைத் தேசமாகவும்

தேசத்தைத் தெய்வமாகவும் பார்த்தவர்கள். அஞ்சி அஞ்சிச் சாகின்ற வராய் - கஞ்சிக்கு வழியில்லாததற்கான காரணத்தைக்கூட அறியா தவராய் - தன் ஞானத்தை மட்டுமன்றித் தன்மானத்தையும் தொலைத்தவராய் - நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இன்றி நடுக்கடலில் தமிழ் மக்கள் தத்தளித்தபோது வெளிச்சம் பரப்பி அவர்களைக் கரைசேர்த்த கலங்கரை விளக்குகள் பாரதியும் பாரதிதாசனும். ஆனாலும் ஆன்மீகத்தையும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டு மேலோட்டமாகப் பார்ப்போர் பலர் பாரதியும் பாரதிதாசனும் இருவேறு துருவங்கள் என மதிப்பீடு செய்தல் உண்டு. இந்நிலையில் இவர்களை முழுதுமறியுங்கால் உண்மை வேறாய் இருக்கிறது என்பதைப் ‘பாரதிதாசனுக்குள் பாரதி’ எனும் இந்நூல் தெள்ளத் தெளிவாய் உள்ளங்கொள்ளுமாறு எடுத்துரைக்கிறது.

எடுத்துரைப்பவர் யார்? இவ்விருவரின் படைப்புகளை யும் எழுத்தெண்ணிப் படித்தவர். இவற்றில் ஊறித் திளைப்பவர். எதையும் நடுநிலையோடு பார்ப்பவர். இன்னும் சொல்லப் போனால் பாவேந்தர் பாரதிதாசனோடு நேரில் பழகும் வாய்ப் பினைப் பெற்றவர். அவர்தான் இந்நூலாசிரியர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம். பாரதியைத் தனது முன்னோடியாகவும், தமக் குப் புதுத்தமிழ் - புதுமுறை - புதுநெறி காட்டிய புலவனாகவும் கொண்டு வாழ்ந்தவர் பாரதிதாசன் என்பதையும், கொண்ட இக் கொள்கையிலிருந்து கடைசிவரை அவர் பின்வாங்கவே இல்லை என்பதையும் தக்க சான்றுகளுடன் ஆணித்தரமாய் இந்நூலில் எடுத்துரைக்கிறார் சிற்பி. அவர் மொழியிலேயே சொல்ல வேண்டு மென்றால், ‘எப்போதும் எப்போதும் பின்னவருக்குள் முன்னவர் வாழ்ந்திருக்கிறார்’ என்பதைப் புலப்படுத்துகிறது இந்நூல்.

சிறப்பாக - இந்த இருபெருங்கவிஞர்களும் தமிழையும் இயற்கையையும் எவ்வாறு அணுகியுள்ளனர் என்பதைத் தமக்கே உரிய தனிப்பாணியில் செதுக்கியிருக்கிறார் நூலாசிரியர். அவருக் குத் தான் இது சாத்தியப்படும் - அவர் சிற்பி என்பதால். கலையழகு வார்த்தைக்குக் கட்டுப்படாது; கண்ணுக்கே விருந்து தரும். எனவே, இப்படைப்பினுள் நீங்களே பயணம் செய்யுங்கள், பயன் பெறுங்கள். சிற்பிக்கு நம் நன்றி!

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இரட்டைக் கவிஞர்கள் பாரதியும் பாரதிதாசனும்.

என்னைப் பொறுத்தவரை அவர்கள் என் இரு கண்களைப் போன்றவர்கள். ஒன்றை உயர்வாகவும் இன்னொன்றைத் தாழ்வாகவும் என்னால் கருத முடியாது.

மகாகவி பாரதியாரைப் பார்க்காத குறையைப் பாரதிதாசனைக் கண்டதால் தீர்த்துக் கொண்ட மகிழ்ச்சி எனக்கு உண்டு.

இவ்விரு பெருங்கவிஞர்களையும் ஒப்பிட்டு நூல் எழுத வேண்டுமென்று நான் ஆசைப்பட்டதுண்டு. நேரம் வாய்க்கவில்லை.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் என் இனிய நண்பருமான முனைவர் ம. இராசேந்திரன், அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த அன்புடன் விடுத்த அழைப்பு எனக்கு ஒரு நல்ல வாய்ப்பாகியது. அவருக்கு என் அன்பும் நன்றியும்.

மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் முறைப்படி விடுத்த அழைப்பை ஏற்று உரையினைத் தயாரிக்க முற்பட்டபோது இந்தச் சிறுநூல் உருவாயிற்று.

சமுதாயம், காதல், உலகப்பார்வை என விரிவாக எழுத ஆசைப்பட்டாலும் பாரதிதாசன், பாரதியார் ஆகியோர் தமிழையும் இயற்கையையும் அணுகிய பாங்கையே இந்த நூலில் எடுத்துக் கூறியுள்ளேன். இன்னொரு வாய்ப்பில் பிறவற்றையும் எழுத விருப்பம்.

இந்நூலில் நான் கூறியுள்ள கருத்துகளில் வேறுபடு பவர் இருக்கலாம். அது அவர்கள் உரிமை.

பாரதிதாசனுக்குள் பாரதி என்ற தலைப்பு -

எப்போதும் எப்போதும் பின்னவருக்குள் முன்னவர் வாழ்ந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துவது.

எனது சொற்பொழிவு தற்போது இந்நூலாக உருவாக் கம் பெற ஆவன செய்த தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. திருமலை அவர்களுக்கும் என் நன்றி.

அன்புடன்
சிற்பி பாலசுப்பிரமணியம்

பொருளடக்கம்

1. நினைவுகளில் பாவேந்தர்

2. பாரதிதாசனுக்குள் பாரதி

3. தமிழ் அமுது

4. இயற்கை

5. நிறைவாக...

1

நினைவுகளில் பாவேந்தர்...

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அன்பிற்குரிய முனைவர் ம. இராசேந்திரன் பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை உரையாற்ற வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டார். தமிழறிஞரும் படைப்பாளியுமான அவருடைய விருப்பத்தை அறிந்தபோது பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

யாருடைய கடைக்கண் பார்வை பட்டு என் கவிதையுணர்வு ஊற்றுக்கால் கண்டதோ அப் பெருங்கவிஞரைக் குறித்து என் மனதுக்குள் மல்லிகைகள் பூத்துச் சொரிந்தன. சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளுக்கும் அறுபது களுக்கும் என் உள்ளம் பயணமாயிற்று.

1951இல் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இடைநிலை வகுப்பில் நான் மாணவனாகச் சேர்ந்தேன். அப்போது என் தமிழறிவு எழுதிப் படிக்கத் தெரிந்த எளிய மாணவனின் அறிவாகவே இருந்தது. காரணம் என் பள்ளிப் படிப்பு கேரள மண்ணில் மலையாள மொழிவழிக் கல்வியாக முடிந்திருந்தது. திருச்சி மாநகரில் என்னைத் தமிழ் என்னும் அளப்பரும் சலதியுள் தள்ளிய பேராற்றல்கள் இரண்டு. ஒன்று மகாகவி பாரதியின் கவிதைகள். மற்றொன்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பொங்கு தமிழுணர்வுப் படைப்புகள்.

இருபதாம் நூற்றாண்டின் இரு மகாகவிகளையும் என் இரத்த அணுக்களில் ஏற்றிக் கொண்டேன். என் இலக்கியப் பயணமும் பாட்டறிவும் பட்டறிவும் எல்லாம் இவர்கள் தந்தவையே-ஆயின. இவர்களை நான் பிரித்தறிந்ததோ , பிரித்துணர்ந்ததோ இல்லை. ஒன்றிலிருந்து ஒன்றாக, நாவும் சுவையுமாக, அரும்பும் மலருமாக, பூவும் கனியுமாக நான் உணர்ந்து வந்திருக்கிறேன். இந்த உணர்வை இருமையில் ஒருமை என்று கூற விழைகிறேன்.

செம்புலப் பெயல்நீர் போலத் திகழும் பாரதி - பாரதி தாசன் கவிதை உறவையும், பாரதிதாசனின் தனித்துவ மலர்ச்சியையும் எடுத்துரைப்பதே என் நோக்கம்.

◆ ◆ ◆

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் பாரதி - பாரதிதாசன் கவிதைகளோடு உறவு பூண்ட நான் வாழும் மகாகவி பாரதிதாசனைக் காணவும், அவருக்குள் நிறைந்து நின்ற பாரதியைத் தரிசிக்கவும் பேராவல் பூண்டிருந்தேன். ஆனால் அப்பேறு உடனடியாக வாய்க்கவில்லை.

1953இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சிறப்பு வகுப்பில் சேர்ந்தேன். அங்கு ஒவ்வொரு நாளும்

பாரதிதாசனின் கவிதைகளோடு எனக்கு நெருக்கத்தை ஏற்படுத்திய அன்பு உறவாகப் பேராசிரியர் மு. அண்ணாமலை திகழ்ந்தார். தாமே ஒரு சிறந்த கவிஞராக 'தாமரைக் குமரி' தொகுப்பால் புகழ் பெற்றிருந்த மு. அண்ணாமலை புதுவையில் பாரதிதாசனோடு சில காலம் சீடராக உடனுறைந்தவர். அவர் வழியாகப் பாரதிதாசனை நேரில் கண்டது போன்ற உணர்ச்சியைப் பகிர்ந்து கொண்டேன்.

நானும் ச. மெய்யப்பனும் (மணிவாசகர் பதிப்பகம்) தமிழியல் துறையில் ஒரே காலத்தில் பயின்ற மாணவர்கள். நாங்கள் 'முத்தமிழ்' என்ற கையெழுத்து ஏட்டை இரண்டு ஆண்டுகள் சிறப்பாக நடத்தினோம். அந்தக் கையெழுத்து ஏட்டுடன் பாரதிதாசனைக் காணும் வியப்புமிகு வாய்ப்பு எங்களுக்கு வாய்த்தது. அந்த மலரில் புரட்சிக் கவிஞரின் கம்பீரமான புகைப்படத்தையும் இணைத்திருந்தோம்.

1955 பிப்ரவரியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக் கொண்டாடியது. அப்போது அறிஞர்கள் பலருடன் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் சோமசுந்தர பாரதியாருக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. அவ்விழாவில் சோமசுந்தர பாரதியார் பெற்ற நீண்ட கரவொலியும், எழுந்த உணர்ச்சிப் பெருக்கும் இணைவேந்தர் எம்.ஏ. முத்தையா செட்டியாரைச் சிந்திக்க வைத்தன. சோமசுந்தர பாரதியாருக்கு ஓரிரு மாதங்களுக்குப்பின் தனி விழா வைக்க முடிவு செய்து, பாரதிதாசனைச் சிறப்பு விருந்தினராக அழைக்க ஏற்பாடு செய்தார்.

தெ.பொ.மீ, பாரதிதாசன், ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்ட விழ..வில் கவிஞரை மாணவர்கள் பலாப்பழத்தில் ஈக்களென மொய்த்துக் கொண்டனர். விம்மிதமும் பெருமிதமுமாக அந்த வீரத் திருவுருவைக் 'காணாத கண் என்ன கண்ணே' என்று நான் சொக்கிக் கிடந்தேன். எங்கள் 'முத்தமிழ்' ஏட்டை அவர் திருமுன் படைத்தோம். அச்சமும், ஆதங்கமும் எங்களைச் சூழ்ந்திருந்தன.

எங்களுக்கு முன் அவருக்குக் காட்டப்பட்ட இன்னொரு

கையெழுத்து மடலின் ஆசிரியர் வாழ்த்துக் கவிதை கேட்க, உறுமியவாறு எழுதித் தந்த கவிஞர் அதற்குப் பொருள் என்ன என்று அதட்டினார். ஏனோ தானோ என்று அவர் பதில் கூற, 'மூணாவது சீரிலே மோனை சும்மாவா போட்டேன்?' என்று அவர் கேட்டு முடித்த நேரம்! எங்கள் 'முத்தமிழ்' மடலை நீட்ட அச்சம் வரக் கேட்பானேன்!

ஏறத்தாழ 400 பக்க அளவிலான மடலைப் பக்கம் பக்கமாகப் புரட்டிய பிறகு 'இம்மலர் தமிழின் முன்னேற்றத்திற்கு அறிகுறி' என்று எழுதிக் கையொப்பமிட்டார். அப்போது நான் இழந்த மூச்சை மீட்டுக் கொண்டேன் . அந்தச் சந்திப்பில் நான் புது மனிதனானேன்.

எட்டாண்டுகள் கழித்துத்தான் நான் மீண்டும் அவரைக் கண்டேன். சென்னை தியாகராய நகர் இராமன் தெருவில் 1963 மே மாதம் கவிஞரைக் காணச் சென்றேன். என் முதல் கவிதைத் தொகுப்பான 'நிலவுப் பூ' நூலுக்குக் கவிஞரின் வாழ்த்துரை பெறுவதே என் தீராத் தாகம். புதுமைப் பதிப்பகம் சோமையா, மணிவாசகர் பதிப்பகம் மெய்யப்பன் ஆகியோருடன் கவிஞர் பொன்னடியானைச் சந்தித்து அவர் உதவியுடன் என் உள்ளம்கவர் கள்வரான கவிஞரைக் கண்டு மகிழ்ந்தேன்.

கவிஞரின் அறையில் 'பாண்டியன்பரிசு' படத் தொடக்கவிழாப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. ஒரு கட்டிலில் முழங்கைகள் இரண்டையும் ஊன்றியவாறு எழுதிக் கொண்டிருந்தார் பாரதிதாசன். என்னைப் பொன்னடியானும் மெய்யப்பனும் அறிமுகப்படுத்தி, நான் அவருடைய மாணவர் மு.அண்ணாமலையின் மாணவன் என்று தெரிவித்தார்கள். அமர்ந்தவாறே என்னை அருகில் அழைத்தார் காலங்களை வென்ற மகாகவி.

'அப்படியானால் நீ என் பேரன்' என்று மலர்ந்த முகத்துடன் தெரிவித்தவாறே என்னை அருகில் இழுத்து நெற்றியில் முத்தமிட்டார் . அது எனக்கு 'எதிர்பாராத முத்தம்'!

அப்போது எழுதிக் கொண்டிருந்த தம் இரு புறங்கைகளையும் தூக்கிக் காட்டினார். அவை கன்னங்கரேலென்று தழும்புடன் காட்சி தந்தன.

எழுதி எழுதித் தமிழ் இலக்கியத்தில் அழியாச் சுவடு பதித்த அப்பெருங்கவிஞரின் புறங்கைகள் படுத்தபடியே எழுதியதால் பெற்ற தழும்புகள் களம் கண்ட வீரனின் வீரத் தழும்புகளாகத் தெரிந்தன.

அச்சுப் பிரதியின் சில பக்கங்களைப் புரட்டி விட்டு இரண்டு நாள் கழித்து வரும்படி தெரிவித்தார். நாள் இரண்டு போவதற்கு நான் பட்ட பாடு துரும்பும் படாது. மீண்டும் சந்திக்கப் போனபோது பலவகைக் கனிகளை வாங்கிக் கொண்டு போனேன் - எனக்கு அவர் தரவிருக்கும் தேமாங்கனி குறித்து அறியாமல் ....

ஏற்கனவே அவர் எழுதி வைத்திருந்த இரண்டு எண்சீர் விருத்தங்களை என்னிடம் தந்து, கையெழுத்து சரியில்லாததால் பெயர்த்து எழுதும்படி பணித்தார். வாழ்த்துக் கவிதை நிகரில்லாதது. அதைத் தாங்க என் தோள்கள் வலிமை இல்லாதவை ....

அண்ணா மலைப்பல் கலைக்கழகப் பேராசான்
அண்ணா மலைஎன் அரியதமிழ் மாணவனின்
கண்ணான மாணவன்நான் என்று கழறித்தம்
கையெழுத் துப்படியைக் கண்ணுக் கெதிர்வைத்தே
அண்டியசீர்ப் பொள்ளாச்சிக் கல்லூரி ஆசான்நான்
அரியநிலவுப் பூக்கவிதை நூல்நான் செய்தேன்
கண்செலுத்த வேண்டுமென்றார்;மாட்டேனென்றா சொல்வேன்
கவிதை ஒவ்வொன்றும் அமிழ்தாக நான்கண்டேன்

பாட்டுத் திறம்கண்டேன் பாலசுப் பிரமணியப்
பாவாணர் செய்தஅப் பச்சைத் தமிழ்நூலில்
நாட்டுத் திறம்என்னே நாற்கவியும் முத்தமிழும்
நல்கும் பயன்என்னே நாவூறிப் போனேன்நான்
வீட்டிற் குறட்டைவிட்ட செந்தமிழர் கண்விழிக்க
வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்
பாட்டை திறக்கவந்த பாலசுப் பிரமணியப்
பைந்தமிழ்ப் பாவாணர் புகழ்பெற்று வாழியவே

நான் எழுதி முடித்து அவர் கையொப்பத்துக்காக வைத்தும், 'நான் என்ன எழுதியிருக்கேன். நீ என்ன எழுதியிருக்கே' என்று கேட்டு விட்டு 'பாட்டைத் திறக்க', என்று நான் போட்டிருந்த ஒற்றை அடித்து விட்டு 'பாட்டை திறக்க' என்று திருத்தினார். நான் அதிர்ந்து போனேன்.

என் வாழ்நாளில் பாரதிதாசன் எனக்கு வாழ்த்து மழை பொழிந்த 1963 மே23 ஆம் நாளை நிகர்த்த இன்னொரு நாள் இல்லவே இல்லை.

இந்த வாழ்த்துக் கவிதையில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி இந்தப் பொழிவுக்கு முக்கியமானது. மரணம் நெருங்கிக் கொண்டிருந்த - இன்னும் 11 மாதங்களில் நம்மிடமிருந்து அவரைத் தட்டிப் பறிக்கப் போகிற அந்தப் பொழுதிலும் அவர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தவர் பாரதியார் என்பது தான் அச் செய்தி.

அன்று உரையாடிக் கொண்டிருந்த போது அவர் சொன்னார்: 'நான் பாரதியார் வரலாற்றைப் படமாகக் கொண்டு வரப் போகிறேன்'. அதற்கான திரையமைப்பையும் உரையாடலையும் இப்போது எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார். அவரிடம் அன்று பிரியா விடை பெற்று வந்தேன்.

அதே ஆண்டில் நான்கு மாதங்கள் கழித்துப் பொள்ளாச்சியில் செப்டம்பர் 22 ஆம் நாள் (22-09-1963) கவிஞர் கே.சி. எஸ். அருணாசலமும் நானும் பேரெழுச்சி மிக்க பாரதி விழாவை நடத்தினோம். எஸ் .இராமகிருஷ்ணன், சிலம்பொலி உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட அந்த நிகழ்வுக்கு கவிஞரை விரும்பி அழைத்திருந்தோம்.

தம் துணைவியார் பழனியம்மாளுடன் வருகை தந்த பாரதிதாசன் காலை முதல் நிகழ்ந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் முழுமையாகப் பங்குகொண்டு மகிழ்ந்தார். பாரதியாரைக் குறித்து ஒரு நீண்ட உரை நிகழ்த்திப் பல்லாயிரம் பேரை மகிழ்வித்ததுடன் பாரதியார் பாடல்களை அவர் பாடிய மெட்டில் பாடியும் காட்டினார். பொதுவுடைமைத் தலைவர் ஜீவாவிடம் தாம் கொண்டிருந்த பற்றையும் எடுத்துக் கூறினார். இரண்டு நாள்

தங்கியிருந்த பின் கரூரில் மகள் இல்லத்துக்குப் பயணமானார்.

அதன் பின்னர் பெரிய நிகழ்ச்சிகளில் அதிகம் அவர் பங்கேற்கவில்லை என்று தோன்றுகிறது. கவிதைகள் மூலமாக அன்றிக் கண்ணாரக் காண்பதற்குப் பின்னர் எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை.

பாரதி தொடர்பான நிகழ்விலும் பேச்சிலுமாகவே என் நினைவுகளில் அவர் கடைசியாகக் கலந்து நிற்கின்றார்.

சுப்பிரமணிய பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இடையே அமைந்த நெருக்கம் உயிர் நேசமாகத் திகழ்ந்தது. இதனை விளக்கும் நிகழ்வுகள் பல. அவற்றில் சிலவற்றை நினைவு கூர்ந்து இருபெரும் கவிஞர்களின் படைப்புகளை - இருமையில் ஒருமையாக எண்ணிப் பார்க்கலாம்.

◆

2 பாரதிதாசனுக்குள் பாரதி

1908 ஆகஸ்டு 26ஆம் நாள் பாரதி இரகசியமாகப் புதுவை அடைந்தார். தேசபக்தர் சிதம்பரனார் சிறையிலிருந்து அனுப்பிய செய்தியும் நண்பர்களின் வற்புறுத்தலும் காரணமாக இந்தக் கவிப்பறவை புதுவையின் சுதந்திர வானத்தை நாடிப் பறந்தது. ஆயினும் 1909 ஆம் ஆண்டில் தான் பாரதிதாசனுக்கும் பாரதிக்கும் நேருக்கு நேரான சந்திப்பு நிகழ்ந்தது. 1918 நவம்பர் 20 ஆம் நாள் புதுவையிலிருந்து தமிழகம் திரும்பினார் பாரதி - 10 ஆண்டுகள் 3 மாதங்களுக்குப் பிறகு. அதன் பின்னும் அவர் சென்னையில் 1921 வரை வாழ்ந்த போதும் பாரதியுடன் பாரதிதாசனின் தொடர்பு நீடித்தது.

பாரதியாரின் வாழ்வில் முக்கிய இடம் பெற்ற அம்மாக்கண்ணுவின் மகன் கொட்டடி வேணு நாயக்கரின் திருமணத்தில் சுப்புரத்தினம் இசைப் பாடல்கள் பாடுகிறார். பாரதியாரின் 'வீர சுதந்திரம்', 'தொன்று நிகழ்ந்தது' பாடல்களையும் பாடுகிறார். கேட்டுச் சுவைக்க முறுக்கு மீசைப் பாரதியாரும் இருந்தார். அவரை 'ரவிவர்மா பரமசிவம்' என்று சுப்புரத்தினம் குறிப்பிட்டிருக்கிறார். பின்னர் வேணு நாயக்கர் பாரதியைச் சுட்டிக்காட்டி 'அவங்க யார், தெரியுமில்லே!' என்று கேட்டு அறிமுகம் செய்து வைக்கிறார். 'உணர்ந்து பாடுகிறீர்கள்' என்று பாரதியார் பாராட்ட, கனக சுப்புரத்தினம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் போகிறார்.

எனக்கு நாணம், சந்தோஷம், பயம், அப்போது என் மூஞ்சியை நான் கண்ணாடி எடுத்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. நான் ஓர் அசல் இஞ்சி தின்ற குரங்கு ....

(ரவிவர்மா பரமசிவ பட பாரதி, ஹிந்துஸ்தான் பாரதி மலர்.. 10.9.1939)

பாரதிதாசனின் இந்தக் குறிப்பில் பாரதியார் மீது அவர் கொண்டிருந்த எல்லையற்ற காதல் வெளிப்படுகிறது.

அதன்பின் பாரதியாரோடு பழகவும் அவர் எழுத்துக்களைப் படிக்கவும் பெற்ற வாய்ப்பைத் தம் கட்டுரைகளில் பதிவு செய்திருக்கிறார் பாரதிதாசன். கவிஞர் சுரதா எழுதிய 'மார்கழியின் உச்சியில்' என்ற கட்டுரையில், சுப்புரத்தினம் பாஞ்சாலி சபதக் கையெழுத்துப் படியைப் படித்துப் பெற்ற அனுபவத்தைத் தம்மிடம் கூறியதாகப் பின்வருமாறு எழுதுகின்றார்:

பாடல்கள் மிக எளிமையாகவும் புரியும்படியாகவும் இருந்தன. அதே சமயம் மிகச் சுவையாகவும் இருந்தன. இப்படி எளிதில் புரியும்படியான கவிதையை நான் பார்த்ததே இல்லை. புரியும்படி எளிதாகக் கவிதை எழுத முடியுமென்று நான் நினைத்ததில்லை. அக் கையெழுத்துப்படி என் கவிதைப் போக்கில் பெரிய மாறுதலை உண்டாக்கியது.

இவ்வாறு சுரதாவிடம் கூறியது பாரதி தாசனின் மெய்யான உணர்வு. இதனைப் புலவர் இராமநாதன் எழுதிய 'கவிஞரும் காதலும்', என்ற நூலுக்கு அளித்த (தன் வரலாற்றுக் குறிப்பு அமைந்த) வாழ்த்துரையில் உறுதி செய்திருப்பதைக் காணலாம். முப்பதாண்டு முடியும் வரை வெறும் கடவுட் பா எழுதிக் கொண்டிருந்த தனக்குப் பாரதி தந்தது என்ன என்பதை அவ் வாழ்த்துரையில் தெளிவு படுத்திக் கூறியிருக்கிறார் பாரதிதாசன்.

பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்

இந்த உண்மையிலிருந்து பாரதிதாசன் ஒரு போதும் தனது கருத்தை மாற்றி உரைத்ததில்லை.

மற்றொரு வகையான அகச் சான்றாகப் பாரதியாரின் 'தராசு' கட்டுரை அமைகிறது. 1916ஆம் ஆண்டு அக்டோபர் 27ஆம் நாள் சுதேசமித்திரன் இதழில் பாரதிதாசன் தன்னைச் சந்தித்த செய்தியைப் பாரதியார் பதிவு செய்துள்ளார். (தராசு - செய்திகளை நிறுத்துக் கருத்துரைக்கும் கட்டுரைத் தொடர்) இக்கட்டுரையில் பாரதிதாசன் பெயர் குறிக்கப்படவில்லை. அது மட்டுமன்றிச் சந்திப்பு நிகழ்ந்து ஆறேழு ஆண்டுகளுக்குப் பின் இக்குறிப்பு வெளியாகின்றது. ஆயினும் எடுத்துக்காட்டப்பட்ட கவிதையால் பாரதிதாசனை அடையாளம் காட்டுகின்றது.

இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார். கைக்கோள ஜாதி ; ஒட்டக்கூத்தப் புலவர் கூட அந்தக் குலந்தானென்று நினைக்கிறேன்.

இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக்கூடாதென்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்தவில்லை...

என்று தொடங்குகிறது குறிப்பு. பின்னர்

எங்கெங்கு காணினும் சக்தியடா

என்ற பாடலின் சில அடிகளைப் பாரதிதாசன் பாடிக் காட்டுகிறார்.

காளை ஒருவன் கவிச் சுவையை

என்று தொடங்குகிறது பாடல்.

விடா முயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே
விடுதலையும் ஏறினால் கவிதையிலே வலிமையேறும்

என்று கருத்துரைத்த பாரதியார் கவிதையை எவ்வாறு அமைத்தால் நல்லது என்று உணர்த்துகிறார்:

நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது. ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும. மல் நெசவு கூடாது. மஸ்லின் நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையுமிருக்க வேண்டும்.இதற்கு மேலே நல்ல வர்ணம் சேர்த்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்.

கவிதையின் வடிவம், வனப்பு, இறுக்கம், எளிமை, கற்பனை ஆகியவற்றை இந்த 'நெசவு' என்ற உருவகத்தின் மூலம் எடுத்துக் காட்டுகிறார் பாரதி.

அக்கட்டுரையின் முத்தாய்ப்பான பகுதி கவனத்துக் குரியது.

அப்போது புலவர் தராசை நோக்கி, நீயே எனது
குரு என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.
தராசு, எழுக நீ புலவன்! என்றது

இந்த அகச்சான்று பாரதியாருக்கும் கவிஞருக்கும் இருந்த நெருக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

பாரதியாருடன் ஏற்பட்ட பாசமும் அன்பும் கலந்த உறவு தம்மை எப்படிப் படைப்புத் தொழிலில் உருமாற்றம் செய்தது என்பதையும் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். இயற்கையிலேயே கவிதையுள்ளமும் படைப்பாற்றலும் பெற்றிருந்த கவிஞருக்கு ஒரு திசை திருப்பத்தைத் தருகிறார் பாரதி.

> ***விபூதி நாமங்களைப் போட்டுக் கொண்டு பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் கேவலமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டு வந்தவர் பாரதியார்தான்.***
>
> (பாரதிதாசன் பார்வையில் பாரதி, ச.சு. இளங்கோ, ப.49.)

இளம் கவிஞரான சுப்புரத்தினம் கவிபாட வல்லவர் என்று வ. வெ. சு. அய்யர் முதலிய நண்பர்களின் நடுவே பாரதியார் அறிவித்ததாகவும், பாரதிதாசன், 'எங்கெங்கு காணினும்' என்ற பாடலைப் பாடியதாகவும் ஒரு செய்தியை இரா. இளவரசு 'பாரதிதாசன் பாடிய சக்திப் பாட்டு' என்ற கட்டுரையில் தெரிவித்துள்ளார். இப்பாடலை வியந்த பாரதியார் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலத்தைச் சார்ந்த கன. சுப்பு ரத்தினம் எழுதியது' என்ற குறிப்புடன் சுதேசமித்திரனில் வெளியிடச் செய்தார்.

இதனால் பாரதிதாசனின் கவிதை எழுதும் திறனை உணர்ந்து பாரதியார் தூண்டிவிட்டார் என அறியலாம்.

'குயில்' திங்கள் இதழில் (1967) 'பாரதியாரோடு பத்தாண்டுகள்' என்ற தொடரை எழுதித் தம் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார் பாரதிதாசன். ஆயினும் பாரதியாருடன் பயின்று பழகி அவர் சிந்தனைகளையும் குறித்து வைத்து, 'பழைய நினைவுகள்' என்ற தலைப்புடன் எழுதி வைத்திருந்த ஏடுகள் பழைமை தாங்க முடியாமல் மறைந்து போயின என்ற வருத்தத்தை இக்கட்டுரைத் தொடரில் பகிர்ந்து கொண்டிருக்கிறார். அதன் இழப்பு பேரிழப்பேயாகும்.

பாரதிதாசன் - புனைபெயர்

அரசுப் பணியில் இருந்தமையால் சுப்புரத்தினத்துக்கு ஒரு புனைபெயர் தேவைப் பட்டது. மதுரையிலிருந்து வெளிவந்த தேசோபகாரி இதழுக்கு ஒரு கவிதை எழுதிய போது. 'கே. எஸ். பாரதிதாசன்' என்று பெயரிட்டு அனுப்பினார் என மன்னர் மன்னன் சுட்டிக் காட்டியிருக்கிறார். (பாரதிதாசன் பார்வையில் பாரதி, ச.சு. இளங்கோ, ப.34.)

காளிதாசன், சக்தி தாசன், ஷெல்லி தாசன் எனப் பெயர்கள் கொண்டிருந்த தம் முன்னோடியின் புனைபெயர்கள் இவருக்குள் இத்தூண்டுதலை அளித்திருக்கலாம் என்பார் ஆய்வாளர் ச. சு. இளங்கோ.

திராவிட இயக்கம் வீறு கொண்டெழுந்த தொடக்க நாட்களில், பார்ப்பன எதிர்ப்புணர்வு கால் கொண்டிருந்த சூழலில் 'பாரதிதாசன்' என்ற புனைபெயர் பலரை மருட்டியது. பாரதிதாசனிடமே பேராசிரியர் அன்பழகன் , தா. பாண்டியன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பரிதிமாற் கலைஞரின் பேரர் வி.ஜி. சீனிவாசன் என மிகப் பலர் சீண்டியபோதும் நிலைகுலையா மலைபோல் நின்று பதில் இறுத்த நிகழ்வுகள் பாரதியாரிடம் அவர் பூண்டிருந்த அசைக்க முடியாப் பற்றின் அடையாளங்கள். ஒரு சான்று:

> ***இது குறும்புத்தனமான வினா. அய்யருக்கு நீங்கள் அடிமையா என்று கேட்பது போலத்தான். நான் என்றென்றும் உளமாரப் போற்றி வழிபடுகின்ற தெய்வம் இந்த அய்யர். அன்பும் பண்பும் தமிழுணர்வும் ஒருங்கு சேர்ந்த பொன்னுருவம் அவர். பாரதியாருக்கு நான் தாசனாக இருப்பதில் உங்களுக்கு என்ன ஆட்சேபணை? இந்த வினாவினை யார் விடுத்தாலும் எனக்குக் கோபம் வரும். ஏனெனில் கழகத்தவர்களோ முன்னேற்றம் காணத் துடித்தவர்களோ யாராயிருந் தாலும் சரி, சீர்திருத்தம் என்ற சொல்லை எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொள்ளத் தெரிந்து கொள்வதற்குப் பலநாளுக்கு முன்னதாகவே தமது***

வாழ்க்கையிலே சீர்திருத்தச் செயல்கள் பலவற்றைச் செய்து காட்டியவர் பாரதியார்.

என வி.ஜி. சீனிவாசன் (சுடர், (புது தில்லி) பாரதிதாசன் மலர் 1966) தம் 'அன்றொரு நாள்' கட்டுரையில் குறித்திருக்கும் பதில் ஒன்றே 'பாரதிதாசன்' என்ற புனைபெயரின் நியாயத்தை உணர்த்தப் போதுமானது.

பாரதிதாசனுக்குக் கேட்கும்படியாக எவரேனும், பாரதியாரை விடச் சிறந்த கவிஞர் பாரதிதாசன் என்று சொல்லிவிட்டு, அவரிடம் சொல்லடி படாமல் தப்பியதில்லை. 'நிறுத்து, நிறுத்து, அய்யரைப் பற்றி அப்படிப் பேசாதே' என்று அவர் பதறித் துடித்துச் சினம் கொண்ட நிகழ்வுகளை, கி.வீரமணி, மு.அண்ணாமலை (என்னிடம் நேருரை), எஸ். ஆர்.சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவித்திருக்கிறார்கள். கல்கண்டு தமிழ்வாணன் இவ்வாறு ஒப்பிட்டபோது, 'அய்யோ! தப்பு, தப்பு . அய்யரைக் குறைச்சு இப்படியெல்லாம் எழுதக் கூடாது. அவரு ரொம்பப் பெரியவர் , ரொம்பப் பெரியவர்' என்று பாரதிதாசன் பதைப்புற்றதைக் கவிஞர் பொன்னடியான் 'பாவேந்தரின் குருபக்தி' என்றே குறிப்பிட்டு எழுதியுள்ளார். (நினைவலைகளில் பாவேந்தர்...1990) மன்னர் மன்னனும் இதனை ஏற்று மொழிந்துள்ளார்.

பாரதிதாசனைப் பொறுத்தவரை பாரதியார் திறனாய்வுக்கு அப்பாற்பட்டவர்.

இலக்கணப்போர்

பாரதியார் எட்டையபுரத்தில் சிறுபிள்ளையாக இருந்தபோதே யாப்பு வகைகளை அறிந்த பெரும்புலவர்களிடையே வாழ்ந்தவர்.

விநாயகர் நான்மணி மாலையில் அகவல், வெண்பா, கலித்துறை, விருத்தம் என வகை வகையாகப் பாடியவர். இரட்டைக் குறள் வெண் செந்துறை பாடியிருப்பவர். பாரத மாதா நவரத்ன மாலையில் ஒன்பது வகைப் பாக்களை அழகுற வடிவமைத்தவர். பாரததேவி திருத்தசாங்கத்தில் வெண்பா முத்துச்சரம் கோத்தவர். ஆயினும் அவரைக் குறித்து இலக்கணம் அறியாதவர் என இன்றும் கூறி வருபவர் உண்டு. இப் பாடல்களெல்லாம் அச்சில் வராத புதுவை நாட்களில் பங்காருப் பத்தர் உள்ளிட்ட

பெரும்புலவர்கள் இவரை இலக்கணம் அறியாதவர் என எள்ளி நகையாடியதுண்டு.

சிந்து, கண்ணி என எளிய பா வகைகளில் அவர் எழுதுவது கண்டு இவ்வாறு கருதியிருக்கக் கூடும். இத்தகைய சூழலில் பாரதிதாசன் அப் புலவரிடையே பாரதியார் இலக்கணம் கற்றவர், அறிந்தவர் என்று வாதிட்டு அவர் பெருமையைக் காப்பாற்றியதாகக் கேள்விப்படுகிறோம்.

நானும் அவர்க்கே எழுத்தியல் உதவுமோர்
தொண்டினால் அவர்க்கும் புலவர்க்கும் தோன்றிய
சண்டையில் வெற்றி கண்டிடச் செய்தேன்.

என்று பாரதிதாசன் (கவிஞரும் காதலும் - ந. இராமநாதன் 1960) தெளிவாகவே தெரிவித்திருக்கிறார்.

பாரதியார் இலக்கணம் வல்லவராய் இருந்தும் புதுவைப் புலவரிடையே அவருக்கு இலக்கணம் தெரியாது என்ற கிசுகிசுப்பு இருந்தது. இதை அவரிடம் தெரிவித்தபோது, 'தமிழ் முன்னால் பிறந்ததா, இலக்கணம் முன்னால் பிறந்ததா?' என்று கேட்டாராம். தமிழ்தான் என்றதும், 'தமிழை முன்னால் போகவிடுங்கள். இலக்கணம் பின்னால் வரும்' என்றாராம். இலக்கணத்தைத் தேவைப்பட்டால் கடப்பது படைப்பாளியின் உரிமைதானே. (ப. கோதண்டராமன், புதுவையில் பாரதி)

சுப்பிரமணிய பாரதியாருக்கு ஓர் இளம் நண்பனாய், பேருதவியாய்ப் பாரதிதாசன் திகழ்ந்து வந்தது வரலாறு. ஆயினும் பல பாரதி வரலாற்று நூல்களில் பேசப்படாத வரலாறாகவும் ஆனது ஒரு வியப்பே. செல்லம்மாள் பாரதி, பெ. தூரன் நூல்களில் கூட இந்தக் குறை இருப்பது வருந்தத் தக்கது.

பாரதிதாசன் பாடிய பாரதி கவிதைகள்

பாரதிதாசனின் கவிதைக் களஞ்சியத்துள் விலை மதிக்க முடியாத ஒரு வைர விளைச்சல் பாரதியாரைக் குறித்து அவர் படைத்துள்ள கவிதைகள்.

எப்போது பாரதியாரைக் குறித்து முதல் கவிதையைப் பாரதிதாசன் எழுதினார் என உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் 1935ஆம் ஆண்டின் இறுதியில் வ.ரா. நிகழ்த்திய சொற்பொழிவுச் சுருக்கம் ஒன்று மணிக்கொடி இதழில் வெளியாயிற்று. அவ்வுரையில் ஷேக்ஸ்பியர், ஷெல்லி, தாகூர் முதலியோரைக் காட்டிலும் பாரதி கவிதைத் திறனில் உயர்ந்தவர் என்றும் அவரது கவிதையின் ஒரு வரிக்கு அவர்கள் கவிதை ஈடாகாது என்றும் குறிப்பிட்டிருந்தார். இதற்கு எதிர்வினையாக விகடனில் இலக்கிய மாணாக்கன் என்ற பெயரில் ஒருவர் கடிதம் மூலம் ஆசிரியரின் கருத்தினைக் கேட்கக் கல்கி எழுதினார் :

ஷேக்ஸ்பியரையும் ஷெல்லியையும் தாகூரையும் காட்டிலும் பாரதியார் உயர்ந்தவர். அவர்களது கவிதைகள் எல்லாம் சேர்ந்து பாரதியாரின் ஒரு வரிக்கு ஈடாகாது என்று யாராவது வெளியிட்டிருந்தால் அவருக்கு இலக்கியம் , கவிதை இவைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பது வெளிப்படை. அவர் நிரக்ஷரகுக்ஷி (எழுத்து வாசனை இல்லாதவர்) என்று சந்தேகிப்பதற்கு இடம் உண்டு

இதற்குச் சுதேசமித்திரனில் வ. ரா. பதில் கூறச் சூடான விவாதங்கள் பறந்தன. சிட்டி, பி. எஸ். ராமையா, புதுமைப் பித்தன் ஆகியோர் இப்போரில் ஈடுபட்ட நேரம். தம் வழிகாட்டியான பாரதியாருக்கு இழுக்கு நேர்ந்துவிட்டதாகக் கருதிய பாரதிதாசன் தான் நடத்தி வந்த '**ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்**' என்ற இதழில் (புத்தகம் 1, வெளியீடு 7) கொதிக்கும் சினத்தோடு பாரதியாரை உலகக் கவி என்று நிறுவும் கவிதை யொன்றை எழுதினார். அதன் தலைப்பு **மகாகவி.**

பாரதியார் உலகக்கவி; அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்
ஒருருக் கொருநாட்டுக் குரிய தான
ஒற்றைச்சாண் நினைப்புடையார் அல்லர்;
வீரர்அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்போர்
சீருடைய கவிஞரிடம் எதிர்பார்க் கின்ற
செம்மைநலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்

என்று கம்பீரமாகத் தொடங்கும் கவிதை அது. அந்தக் கவிதையில் பாரதியார் நிகழ்த்திய புதுமைகளை அடுக்கடுக்காகச் சொல்லி,

அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவியென்றால் புவிமேல் குற்றம்

என்றும்,

தராதலத்துப் பாஷைகளில் அண்ணல் தந்த
தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும் சேதி

என்றும் சரம் சரமாக வாதங்களை அடுக்கினார். தனித்தனியாக அவர் படைப்புகளின் நயங்களைப் பொழிந்தார்.

ஞானரதம் போலொரு நூல் எழுது தற்கு
நானிலத்தில் ஆளில்லை ; கண்ணன் பாட்டுப்
போல் நவிலக் கற்பனைக்குப் போவ தெங்கே?
புதிய நெறிப் பாஞ்சாலி சபதம் போலே
தேனினிப்பில் தருபவர் யார்?

என்று அறைகூவல் விடுத்தார். இப்படி பாரதிக்கு எதிர்க்கட்சி உருவாகி இருப்பதற்குக் காரணமானவர்கள் 'பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே' என்ற பாரதியாரின் சாதிய எதிர்ப்பால் பாதிக்கப் பட்டவர்களே என்று முழங்கினார்.

உலகக்கவி அல்லஅவர் எனத்தொ டங்கி
அய்யர்கவி தைக்கிழுக்கும் கற்பிக் கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?

என்று எச்சரிக்கை நெருப்பை வாரி இறைத்தார் பாரதிதாசன்.

ஆயினும் இக்கவிதைக்கு முன்னதாகவே 1934 ஜூலை 22ஆம் நாள் மணிக்கொடி இதழில் 'கொடைத் தமிழன்' என்ற பாரதி பற்றிய நறுங்கவிதை காணக் கிடைக்கிறது. 'வெண்மதி போல் மற்றொன்று செய்வ துண்டோ?' என்று கிளர்ச்சியுடன் வினவுகின்ற கவிதை அது. 'திங்கள் கதிர் உள்ள மட்டும் உன் கீர்த்தியுண்டு' என்று அழுத்திக் கூறும் கவிதை அது.

சிங்கமென்று நீயுரைத்தாய் தமிழர் தம்மைச்
செய்கையிலே வானுயர்ந்தாய் தமிழா! உன்னை
எங்குலத்து வீரனென நாங்கள் ஏத்தும்
இசைஉனக்குக் கேட்பதுண்டோ வானில் அங்கே

என்று வானுலகை நம்பாத கவிஞர் உணர்ச்சிப் பெருக்கில் வானுலகு குறித்தும் பேசுகின்றார்.

பாரதியாரின் **'வேண்டுமடி எப்போதும் விடுதலை'**, **'செந்தமிழ்நாடு'**, **'பொழுது புலர்ந்தது'** ஆகிய பாடல்கள் பிறந்த வரலாற்றைக் கவிதைகள் ஆக்கியுள்ளார் பாரதிதாசன்.

(பா.தா. கவிதைகள் 2)

புதிய ஆத்திசூடி வளர்ந்த கதையை ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் கவிதைகள் உருவான சூழலை நேரடியாக அனுபவத்தில் கண்டுணர்ந்து செய்த பதிவுகள் என்பதால் வரலாற்று முக்கியத்துவம் உடையவை.

பாரதியார் பார்த்த நாடகம் குறித்து **'நாடக விமர்சனம்'** என்று எழுதப்பட்ட கவிதையின் மூலமாகப் பாரதியாரின் கலையுணர்வைப் படம் பிடிக்கிறார் பாரதிதாசன். மரணத் தறுவாயில் நாடகப் பாத்திரம் பாடி நீட்டி முழக்குவதைப் பாரதியார் விமர்சிக்கின்றார். இவ்வாறே சுவையற்ற - கருத்தற்ற பொழிவுகளைக் கேலி செய்யும் பாரதியார், திரு.வி.க.வின் உரையைக் கேட்டு 'இதுவே பேச்சென்பேன். பாரதியார் எழுவார் வீழ்வார்'

என்று உணர்ச்சி வசப்பட்டதையும் பாரதிதாசன் எடுத்துக் காட்டியுள்ளார். 'தண்டமிழின் மேலாம் தரம்' கண்டவர் பாரதியார் என உணர்த்துகிறார்.

பாரதியாரின் சாதிய எதிர்ப்பு, சமத்துவ உள்ளம், பாச உணர்வு, போதைப் பழக்கம், கவி படைக்கும் திறன். பன்மொழிப் புலமை, நகைச்சுவையுணர்வு, வீர நெஞ்சம், வறுமையிற் செம்மை, தத்துவ நோக்கு எனப் பல கோணங்களில் பாரதிதாசன் பாரதியாரை நமக்கு உணர்த்திக் காட்டுகிறார். ச.சு. இளங்கோ, மன்னர் மன்னன் நூல்களில் இதற்கு ஏராளமாகச் சான்றுகளைக் காணலாம்.

ஒரு கவிதை - பாரதியாரைப் பாரதிதாசன் வடித்துருவாக்கிய சிற்பம் - **'புது நெறி காட்டிய புலவன்'**. 1946இல் திருச்சி வானொலியில் தலைமைக் கவிதையாகப் பாரதிதாசன் குரலில் ஒலித்த இந்தச் சொல்லோவியத்துக்கு நிகராகப் பாரதியாரை முழுமையாகச் சித்திரித்த இன்னொரு கவிதை இல்லை.

காலம் சிந்தனையாளர்களைத் தன் தேவை கருதிக் கருவறையில் சுமந்து காத்திருக்கிறது என்ற கருத்தில் இராமாநுசர் வருகை, இராமலிங்கர் தோற்றம், லெனின் பிறப்பு.... விக்டர் யூகோ எழுச்சி ஆகியவற்றை அடுக்கியுரைத்த பின் கூறுகின்றார் :

தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம் தமிழுக்குத் தகும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.

அடுத்து வரும் ஆணிப் பொன் வரிகளில் பாரதியின் பன்முகப்பரிமாணங்கள் பளிங்குத் தமிழில் பச்சை மயிலென நடனம் புரிகின்றன.

பைந்தமிழ்த் தேர்ப் பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில் இந் நாட்டினைக்
கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு

மேலும் தொடர்கிறது. பாரதிதாசனின் காலக் குரலான கவிதை:

நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன், புதிய
அறம்பாட வந்த அறிஞன், நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்
தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்.

முதல் இரண்டு வரிகளில் முக்குளித்த பின் - பொழியும் பனிநீர்ப் பூக்களின் நறுமண மழையில் நனைந்த பின் - இன்னும் கவிதை வேண்டுமோ என்று நெஞ்சம் நெகிழ்ந்து போகிறது.

பாரதியைக் குறித்துப் பாரதிதாசன் எழுதியுள்ள இந்த மின்வெட்டுக் கல்வெட்டு வரிகளுக்கு நிகராகப் பாவேந்தரை யாரும் பாடியதாக எனக்கு நினைவுக்கு வரவில்லை.

நினைவுபடுத்தி, நினைவு படுத்திப் பார்த்தாலும் இந்தத் தங்கப் புதையலுக்கு நிகராக மற்றொரு மாமனிதரைக் குறித்துப் பாரதிதாசன் எழுதிய மாணிக்க வரிகளே மனதுக்குள் வருகின்றன.

பெரியாரைக் குறித்துப் பாவேந்தர் பாடிய

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்

என்ற எழுத்தில் கனிந்து இதயத்தைப் பிழியும் வரிகளே அவை.

பாரதியும் பெரியாரும் இரு துருவங்கள். அவற்றை இணைக்கின்ற காந்த வெளி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

3 தமிழ் அமுது

பாரதிதாசன் இந்திய தேசியப் போராட்டச் சூழலில் விடுதலை இயக்கக் கவிஞராக விளங்கி(விடுதலை பெறுமுன்,)தமிழ்த் தேசியக் கவிஞராய் முகிழ்த்தவர். அவரைத் தமிழியக் கவிஞர் அல்லது தமிழியக்கக் கவிஞர் என அடையாளம் காண்பது பொருத்தமானது.

நாட்டு விடுதலையில் தொடங்கி, சமுதாய விடுதலைக்குக் குரல் கொடுத்து, மொழி விடுதலையைத் தன் கவிதை மையமாக்கியவர் பாரதிதாசன்.

வரலாற்றில் தமிழ்க் குரல்

தமிழ் மொழியைப் பெருமைப் படுத்திப் பாடிய திருவிளையாடல் புராண ஆசிரியர், மொழிக்குத் தெய்வீகத் தன்மையை ஏற்றினார்.

கண்ணுதற் பெருங் கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்த இப்
பசுந் தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப் படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ?

முதற் சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் முதலாகத் தமிழ் ஆய்ந்தனர் என்ற மரபுவழி நின்று இக்கவிதை பேசுகின்றது.

பரஞ்சோதியார் தமிழின் பெருமைகளாகத் தொண்டர் நாதனைத் தூது செய்வித்ததும் , முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுரு ஆக்கியதுமாகிய (சுந்தர மூர்த்தி நாயனார், திருஞான சம்பந்தர்) அற்புதங்களை எடுத்தோதுவார்.

இவ்வாறு இக்கருத்து மேலெழக் காரணம் அன்று வடமொழி ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்ததுதான் என்று கூறிவிடலாம்.

இத்தகைய ஒரு சூழல் பக்தி இலக்கியக் காலத்திலும் நிலவியது. இதனைத் 'திருமுறை இலக்கியம்' எழுதிய தமிழறிஞர் சோ. ந. கந்தசாமி,

வடமொழியைத் தெய்வமொழி என்று பேசிய காலத்தில் அருமைத் தமிழும் தெய்வமொழியே என்ற உண்மையினைத் திருமுறை ஆசிரியர்களும் பின் வந்த அருளாளர்களும் மறவாது குறித்தனர்.

என்று சுட்டிக் காட்டுவார். இதனாலேயே திருஞான சம்பந்தர் 'நற்றமிழுக்கு இன்துணை ஞான சம்பந்தன்', 'பழுதிலிறை எழுதுமொழி தமிழ் விரகன்' என்றெல்லாம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். அவர் பிறப்பைச் சொல்லும் சேக்கிழார்,

அசைவில் செழுந் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல

அவர் பிறந்தார் என்று சிறப்பித்துக் கூறுவார். அப்பரடிகளோ,

தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்

என்று உருகிக் கூறுவார்.

சுந்தரரோ 'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்' என்று இறைவனை ஏத்துவார். முன்னைய அடியார்களின் பனுவல்களை 'இன்றமிழ்', 'தண்தமிழ்' என வியப்பார். மாணிக்கவாசகர் 'தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாடு' என்பார். திருக்கோவையாரில் மதுரையைக் குறித்து, **'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்'** என்பார். திருமந்திரம் என்னும் மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ் நூல்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே

என்று பேசும். கருவூர்த்தேவர் தம் பாடலை 'அமுதம் ஊறிய தமிழ் மாலை' என மனம் கசிவார். சைவ இலக்கியங்களில் இவ்வாறு தமிழின் பெருமை களி நடமாடும்.

கம்பனோ வண்டுகள் மலர்வதை 'வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும்' என்று கூறுவான். அகத்தியனை அறிமுகம் செய்யும் போது,

என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்

என்று தமிழை வியப்பான். வானரத் தூதுவர்களாக அனுமனும் பிறரும்

செல்லும் போது தமிழ் நாட்டை - தென் தமிழகத்தை வனப்புமிக்க வருணனைக்குள்ளாக்கி அறிமுகம் புரிவான்:

அத் திருத்தகு நாட்டினை அண்டர் நாடு
ஒத் திருக்கும் என்றால் உரை ஒக்குமோ
எத் திறத்திலும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்

வைணவச் செல்வி ஆண்டாள் நாச்சியாரோ தன் திருப்பாவையை, 'சங்கத் தமிழ் மாலை முப்பது' என்று பெருமிதம் கொள்வார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலார் வடமொழி அனைத்து மொழிகளுக்கும் தாய் என்று யாரோ சொன்னபோது, அவ்வாறாயின் தமிழ் தந்தை மொழி என்று உணர்வுடன் மொழிந்தவர்.

முதல் நாவல் தந்த மாயூரம் வேதநாயகம் பிள்ளை தமிழ் மொழியைப் புறக்கணித்தோரை நோக்கிச் சொல்லிய மொழிகள் இன்றைக்கும் பொருந்துமே!

நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ் ; நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ் ; நம்முடைய மழலைச் சொல்லால் நம்முடைய தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்ததும் தமிழ்; நாம் குழந்தைப் பருவத்திற் பேச ஆரம்பித்த போது முந்தி உச்சரித்ததும் தமிழ்; - தாய், தந்தை, குரு முதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ்; ஆதி காலம் முதல் நம்முடைய முன்னோர்களெல்லாம் பேசின பாஷையும் தமிழ் ; நாட்டுப் பாஷையை விட்டு விட்டுச் சமஸ்கிருதம், லத்தீன் முதலிய அந்நிய பாஷைகளைப் படிக்கிறவர்கள் சுற்றத்தார்களை விட்டு விட்டு அந்நியர்களிடத்தில் நேசஞ் செய்கிறவர்களாக இருக்கிறார்கள்

பிரதாப முதலியார் சரித்திரம் (1957) ப.210)

ஆங்கில மோகத்தையும் கடுமையாகக் கடிகின்றார் வேத நாயகனார். அதே நூற்றாண்டில் மனோன்மணியம் தந்த சுந்தரம் பிள்ளையின் தமிழ்த் தாய் வாழ்த்து (நீராருங்கடல் உடுத்த) தமிழ் மக்களுக்குக் கிடைத்த, தமிழ்க் காதலை ஊட்டிய செஞ்சொற் களஞ்சியம்.

வடமொழியோடும் வடமொழி வேதங்கள், மனுநீதி, ஆகியவற்றோடும் ஒப்பிட்டு, தமிழ் மொழியினிடம்,

சதுர் முறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினது

என்று பெருமிதம் கொள்ளுவார் சுந்தரனார்.

பாரதியாரின் வருகைக்கு முன்னரே தமிழ் மொழிப் புகழ்ச்சி நமக்கு ஒரு மரபாக இருந்திருக்கிறது. 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' என்ற தமிழ் விடு தூது தந்த வளமான மரபு அது.

பாரதி தமிழ்

ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன் காலம் முதல் தமிழ் வாழ்த்துப் புதுமை தந்த சுந்தரனார் காலம் வரை மொழியைப் புகழ்வதும், பாராட்டுவதும் வடமொழியோடு ஒப்பு நோக்கிப் பேசுவதும் நமக்குப் புதிதல்ல.

'தமிழினிய தெய்வதமே - மொழிகள் குலத் தனி விளக்கே' என்று சோமசுந்தர பாரதியாரும் போற்றியுள்ளார்.

ஆனால் பாரதியார் தமிழ் மொழியைக் குறித்துச் சிந்தித்தது பண்டைய சிந்தனைகளிலிருந்து பளிச்சென்று வேறுபட்டது.

என் நாவில் பழுத்த சுவைத்
தெண்டமிழ்ப் பாடல் ஒரு கோடி
மேவிடச் செய்குவையே (வி.நா. மாலை -30)

என்று மரபு வழியில் விண்ணப்பம் செய்ததுண்டென்றாலும் அவர் பாடிய தமிழ், தமிழர், தமிழ் நாடு குறித்த ஆறு கவிதைகள் முற்றிலும் பொருண்மையில் வேறுபட்டவை. தமிழுக்கு வாய்த்த ஆறுமுகங்கள் அவை.

'செந்தமிழ் நாடு' - பாடலில் 'காதில் இன்பத் தேன்' பாய்கிற அனுபவம் முன்னையோர் கூறாதது. தமிழகத்தின் இயற்கை வளம் 'காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ் கண்டதோர் வையை பொருநை' யாய்ப் பெருக்கெடுக்கிறது. செல்வம் எத்தனையுண்டு புவி மீது அத்தனையும் படைத்த தமிழ் நாடு! தமிழ் நாட்டின் எல்லைகளையும் வகுத்தளித்தார் பாரதியார்

நீலத் திரைக்கடல் ஓரத்திலே - நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே -புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

தமிழ்நாடு கல்வியுடையது - கம்பனைப் பெற்றது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த வான் புகழ் கொண்டது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மணியாரம் படைத்தது. கடல் கடந்து வென்ற வீரம் உடையது.

இப்படித் தமிழ் நாட்டின் மாண்புகளை முதன் முதலில் வரையறுத்தது பாரதி தமிழ்.

'தமிழ்த்தாய்' என்ற கவிதை தமிழ் அன்னையின் ஆதங்கம் மிக்க குரலாய் ஒலித்தது. ஆதிசிவன் தமிழின் தந்தை என்ற தொன்மத்தில் தொடங்கி மூவேந்தர் வளர்த்த கதையைத் தமிழ்த்தாய் மொழிகிறாள். தமிழில் எழுந்த காவியங்கள்,

கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துப்

புனையப்பட்டன என்று புத்தம் புது உருவகம் செய்கிறது பாரதி தமிழ். இதன் பொருளாழத்தில் திளைக்கு முன் - தமிழ் அன்னையின் பேச்சு தொடர்கிறது. எத்தனையோ மொழிகள் அழிந்த பின்னும் தான் வாழ்ந்த கதை சொல்லிய தாய், இன்று 'கொன்றிடல் போல் ஒரு வார்த்தை' கேட்டதாக மனம் வெம்புகிறாள்.

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

அதனால் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்றான் பேதை. என் பிள்ளைகளே, 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்கிறாள் தாய்.

தமிழ் புதிய உலகின் பொலிவுகளைப் பெறவும், அறிவியல் மொழி ஆக்கப் பெறவும் பாரதி அறைகூவல் விடுக்கிறார்.

இதே கருத்தை இன்னொரு வகையாகக் கூறுகிறது 'தமிழ்' என்ற கவிதை. 'யாமறிந்த மொழிகளிலே' என்று மொழியையும், 'யாமறிந்த புலவரிலே ' என்று புலவர்களையும் புகழ்ந்து கூறிய பின் தேமதுரத் தமிழோசை உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்ற வேட்கையை முன் வைக்கிறார் பாரதி. இதற்கான மார்க்கம் என்ன? மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் கூறி மகிழாமல்,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

என்று புது நெறி காட்டுகிறது பாரதி தமிழ்.

'வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி' யைப் புகழ்கிறது இன்னொரு பாடல்.

தமிழ் இனம் உலக வீதியில் படும் துயர்களை எல்லாம் சொல்லி 'விதியே, விதியே தமிழச் சாதியை என் செய நினைத்தாய்' என்று வெம்புகிறது. 'தமிழ்ச் சாதி' என்ற கவிதை. உலகத் தமிழர் படும் இன்னல்களைச் சொல்லி நொந்து புலம்புகிறது.

ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென் முனை அடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்.

படும் வேதனைகள் சித்திரங்களாகின்றன. தமிழரின் எதிர்காலம் குறித்த தீராக் கவலையில் நொந்து போகிறது பாரதி தமிழ்.

'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திரு நாடு' எனத் தன் முதன்மை உரிமைகளைத் தமிழுக்கும் தமிழர்களுக்குமாகப் பகிர்ந்து தருகிறார் பாரதி மற்றொரு கவிதையில்.

இந்த ஆறு கவிதைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளவை:

1. தமிழின் பழமை 2. தமிழ் நாட்டு வளம் 3. தமிழை அறிவியல் மொழியாக்கும் தேவை 4. அதற்கான வழிவகைகள் 5. உலகத் தமிழரின் துயரம் 6. இந்தியத் தமிழரின் எதிர்காலம் ஆகியன.

உரைநடைப் பகுதியில் தமிழைக் கல்வி மொழியாக்கும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கீலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசியம் என்ற பதத்திற்கு முழுவதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை...

தமிழ் நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா விவகாரங்களும் தமிழ் பாஷையில்

நடத்த வேண்டும் என்பது பொருள்.

அங்கு நூல்களெல்லாம் தமிழ் வாயிலாகக் கற்பிக்கப்படுவது மட்டுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலேயே பெயர் சொல்ல வேண்டும். ஸ்லேட், பென்சில் என்று சொல்லக்கூடாது.

இப்படி வழித் தடங்களைப் பாரதி உருவாக்கி அமைத்த நெறியில் பாரதிதாசனின் தமிழியக்கம் பயணம் தொடங்கியது. ஆயினும் பாரதிதாசனின் தமிழியக்கம் ஒரு வானில் பன்னிலவு எனும்படி புதிய புதிய சாளரங்களைத் திறந்து வைத்தது.

முன் எப்போதும் இல்லாத உள்ளத்து எழுச்சிகளைத் தமிழ் மக்களிடம் உண்டு பண்ணியது பாரதிதாசன் தமிழ்.

அவருடைய தமிழ்மொழி,தமிழ்இன, தமிழகப் பார்வைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. உணர்ச்சிப் பார்வை

2. கருத்துப் பார்வை

3. இயக்கப் பார்வை

4. அறிவியல் பார்வை.

உணர்ச்சிப் பார்வை

பாரதிதாசனின் மொழி குறித்த கவிதைகளில் ஒரு பெரும் பகுதி உணர்ச்சி அலைகளால் கட்டமைக்கப்பட்டது.

'கனியிடை ஏறிய சுளையும்' என்ற பாடல் இவ்வகையில் முக்கியமானது. கனிச்சுளை, கரும்புச்சாறு, தேன், பாகு, பால், இளநீர் என்பனவற்றை இனியன எனலாம். ஆனால் தமிழ் என் உயிர்; இயற்கையில் கேட்கும் வண்டின் ஒலி, நதியின் ஒலி, குழலிசை, வீணை இசை, மழலைப் பெண்களின் கொஞ்சும் குரல் விருப்பம் தருவன எனினும் தமிழ் என் உயிர் ; உறவுகளான சகோதரர், சுற்றம், அன்னை, தந்தை, மனைவி, பிள்ளை தமிழை நோக்க அயலவர் ; வானம், நிலா, பரிதி, கடல், மலை உயர்வெனினும் தமிழினும் மிக்கவை அல்ல; சுவையுணவுகள் தோற்கும் தமிழுணர்வை நோக்கி...

செந்நெல் மாற்றிய சோறும் - பசு நெய்
தேக்கிய கறியின் வகையும்
தன்னிகர் தானியம் முதிரை - கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன்மது ரஞ்செய் கிழங்கு - காணில்
நாவில் இனித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா - உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே

புலன்களால் துய்க்கப்படும் இன்பங்களை வெல்கிறது தமிழ்.

மற்றொரு கவிதை 'தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்கிறது. சுப்பிரமணியர் துதியமுது பாடியவர் தமிழை அமுது என்கிறார். அமுது என்ற சொல்லில் தன் ஆசானைப் போலப் பாரதிதாசனுக்கும் ஈடுபாடு.

பாரதியார் காதலி இதழை 'அமுதூற்று' என்றும், கண்ணனை 'உயிரின் அமுது' என்றும், காதலி இடையை 'அமிர்த வீடு' என்றும்,

நிலவைக் ‘கொல்லும் அமிழ்து’ என்றும், குயில் ஓசையை ‘இன்னமுது’ என்றும் சொல்லியது போன்றே தமிழைத் ‘தெள்ளூற்ற தமிழ் அமுது’ என்றும் கூறியிருப்பதை இங்கே எண்ணிப் பார்க்கலாம்.

அமுது என்று தமிழை அழைத்த பாரதிதாசன் ‘இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல்லமுது’ என்று கொண்டாடுவார்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு

என்று ஆர்ப்பரிக்கிறது பாரதிதாசன் தமிழ். காதலை உயிரியற்கை என்றவர்,

மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை

என்று தமிழின்பத்தில் மூழ்கி எழுவார்.

தமிழ் என்றால் தன்னை இழக்கும் உணர்ச்சிப் பெருக்கின் காரணமாக,

செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே

என்று பரவசம் கொள்வார்

இனியவற்றுள் இனியது உயிர். அந்த உயிராய் உறைவது தமிழ். பாரதிதாசனின் உணர்ச்சிப் பார்வை நிறைவதும் கரைவதும் அந்த உயிரில்.

தமிழ் என்னில் எம் உயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்

என்பது புரட்சிக் கவிஞரின் உயிர் வரைந்த உணர்ச்சி ஓவியம்.

கருத்துப் பார்வை

கருத்து நிலையிலிருந்து தமிழ் மொழியை அணுகும் நெறியிலும் பாரதியாரைப் பாரதிதாசன் தழுவிச் செல்கிறார்.

தமிழ்க் கல்வி குறித்துப் பாரதியார் கவலை கொண்டது போன்றே பாரதிதாசனும்,

இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்.

என ஆர்வமுடன் மொழிகிறார்.

தேசியக் கல்வி பற்றிய கட்டுரைகளில் பாரதியார் விதந்து கூறியது போன்று பாரதிதாசனும்,

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளி உலகில் சிந்தனையில் புதிதுபுதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு

செந்தமிழைச் செழுந்தமிழாக்க விழைகிறார்.

'பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும்' என்ற பாரதியாரின் விழைவு விரிகடலாகிறது பாரதிதாசனிடம்!

சிறுகதை புதினத் தோடு – பல
சிற்பச் செந்நூல்பல போடு
அறுத்த அறுவடை மேடு – என
ஆக்குக அறிவியல் ஏடு

என்றும்

கைத்திறச் சித்தி ரங்கள்
கணிதங்கள் வான நூற்கள்
மெய்த்திற நூற்கள் சிற்பம்
விஞ்ஞானம் காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்குநாள் எந்த நாளோ?

என வளம் பெருகு தமிழுக்குப் பாரதிதாசன் திசை காட்டுகின்றார். இத்தருணத்தில் நம் நெஞ்சில் பாரதியின் புதிய ஆத்திசூடி வரிகள்...

சரித்திரத் தேர்ச்சி கொள்..
நீதி நூல் பயில்...
உலோக நூல் கற்றுணர்
வான நூல் பயிற்சி கொள்

நிரல் நிரலாய் வந்து செல்லத் தவறாது.

தமிழ்ச் சிறாருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய பாடங்களில் நில நூல், கணக்கு, அரசியல், பொருள் நூல், அறிவியல், கைத்தொழில், வாணிகம், விவசாயம் ஆகியவற்றைப் பட்டியலிடும் பாரதியார் மதப்படிப்பையும் அதில் சேர்க்கிறார். பாரதிதாசன் இதனை நிச்சயம் ஏற்கவில்லை.

காசைப் பிடுங்கு தற்கே - பலர்
கடவுளென் பார்இரு காதையும் மூடு
கூசி நடுங்கிடு தம்பி - கெட்ட
கோயிலென் றால்ஒரு காதத்தில் ஓடு

என்று எழுதிய பாரதிதாசன் முற்றிலும் இங்கு மாறுபடுகின்றார். காரணம் 'சமயம் என்னும் சூளையிலே தமிழ்நட்டால் முளையாது' என்பதில் உறுதி பூண்டவர் அவர்.

இயக்கப் பார்வை

பாரதிதாசன் தமிழ் ஓங்கி வளர வேண்டுமெனில் வெறும் சொல்போதாது; செயல் வேண்டும் என்று தெளிந்தவர். அதனாலேயே 'தமிழியக்கம்' அவர் எழுதுகோலில் பிறந்தது. ஒவ்வொரு துறையிலும் - வாணிகம், அரசியல், குடும்பம், கோயில், விழா, இசை, நாடகம், இதழியல் எங்கெங்கும் தமிழ் இயக்கமாகி வலுப்பெற வேண்டுமென்று வலியுறுத்தவே தமிழியக்கம் படைத்தார்.

வருங்காலத் தமிழகம் என்ற கா. அப்பாதுரையாரின் நூலுக்கு எழுதிய முன்னுரையில், "திரு. கா. அப்பாதுரை 'தமிழ் வாழ்க' என்று உரைநடையில் எழுதியதை நான் கவிதையில் தமிழியக்கமாக எழுதியிருக்கிறேன்" என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார் (பாவேந்தம், முருகு சுந்தரம் ப.305.) எனினும் இப்படைப்பு பாரதிதாசனின் இயக்க உணர்வில் பிறந்தது எனலாம். ஓர் இளைய பட்டாளத்தைக் களத்தில் இறக்கிவிடத் தூண்டிய கையேடு தமிழியக்கம்.

'வரிப்புலியே தமிழ் காக்க எழுந்திரு' என்று தூண்டுகிறது தமிழியக்கம். 'தமிழார்வம் மிக்க இளைஞர்கள் இத்தகைய துறைகளில் தமிழ் முன்னேற்றம் கருதி இயன்றவாறு கிளர்ச்சி செய்ய வேண்டும்' என்று முன்னுரைக் குறிப்பில் தெரிவிக்கிறார் பாரதிதாசன். ஒரு கூட்டம் கோயிலில் பிறமொழிக் கூச்சலைத் தடுக்க, ஒரு கூட்டம் பிற மொழி விளம்பரப் பலகையை மாற்ற என்று கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று தூண்டுகிறார்.

முதல் இயலில் இயக்கத்தைத் தட்டி எழுப்பி உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டு பண்ணுகிறார்.

கரும்புதந்த தீஞ்சாறே கனிதந்த நறுஞ்சுவையே
கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே அணிதந்த செந்தமிழே
அன்பே கட்டி
இரும்புதந்த நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலை
ஈட ழித்து
வரும்புதுமை நினைக்கையிலே நெஞ்சுபதைக் கும்சொல்ல
வாய்ப தைக்கும்..

இதன் பின் இளைஞனை, 'எது செய்ய நாட்டுக்கே எனத் துடித்த சிங்கமே' என்று அழைத்து, 'தமிழுக்குத் தொண்டு செய்வாய் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே' என்று கிளர்ந்தெழச் செய்கிறார். மங்கையர் முதியோரை எழுச்சி கொள்ளத் தூண்டி, 'தமிழ் நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை', என்று வாணிகர்க்கு உணர்த்தி, 'தமிழ்நாட்டின் உப்பைத் தின்றீரே' என்று அரசியல் அலுவலரை முகத்தில் அறைந்து, இலக்கணப் பிழை, கருத்துப் பிழை தவிர்க்கப் புலவருக்கு விழிப்புத் தந்து அனைத்துத் துறைகளிலும் தமிழியக்கம் தொடருகிறது. எல்லா இடங்களிலும் - கோயில், கல்வி நிலையம், இசை மேடை - எல்லா இடங்களிலும்,

கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க

என்று தமிழியக்கம் ஆணை இடுகிறது.

இசை மேடைகளில் திரும்பத் திரும்பத் தெலுங்குக் கீர்த்தனைகள் கேட்கும் தமிழர்க்கு 'இரும்புக் காது', என்று கேலி செய்யும் பாரதியின் குரல் (சங்கீத விஷயம் என்ற கட்டுரையின் மூலமாகப்) பின்புலத்தில் கேட்கிறது.

பாரதி புள்ளியாக வைத்ததைப் பூமியும் ஆகாயமுமாக வளர்த்திருக்கிறது பாரதிதாசனின் தமிழியக்கம்.

அறிவியல் பார்வை

அறிவியல் பார்வை பாரதியாருக்கும் உண்டு. பாரதிதாசனுக்கும் உண்டு.

... தன்னுடை
அறிவினுக்குப் புலப்படல் இன்றியே
தேயமீது எவரோ சொலும் சொல்லினைச்
செம்மையென்று மனத்திடைக் கொள்வதாம்
தீய பக்தி இயற்கையும் வாய்ந்திலேன்

என்று அறிவியல் அணுகு முறையைப் போற்றியவர் பாரதி.

வால் நட்சத்திரத்தை, ஜகதீச சந்திர போசை, பாஸ்கரரைக் கவிதையில் பாடியவர் பாரதி. எமில் வெர் ஹோரன் என்ற பெல்ஜியக் கவிஞரை அடியொற்றி,

வலிமை ஓர் அழகு, அழகு ஒரு வலிமை, இயந்திர
ஆலை, நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர்,
பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான். உயர்ந்த கவிகள்
வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில்
வர்ணனை செய்து தான் இருக்கிறார்கள்.

என்று அறிவியல் படைப்புகளைக் கவிதைப் பொருளாக்க விழைந்தவர் பாரதியார்.

ஆனால் தமிழ் மொழியின் தோற்றம் குறித்துப் பாடும் போது தொன்மக் கதையை முன்வைக்கிறார். 'ஆதி சிவன் பெற்றுவிட்டான்' என்ற பழங்கதையை முன் வைக்கின்றார் பாரதி.

பாரதிதாசன் தொன்மப் பார்வையை ஏற்காதவர். அது மட்டுமன்று; ஒரு மொழி ஒருவனால் படைக்கப்பட்டதன்று என்ற அறிவியல் கொள்கையை முன் வைக்கின்றார்.

திங்களொடும் செழும் பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றுடன் பிறந்த தமிழ்
உடன் பிறந்தோம் நாங்கள்

என்று பெருமிதமாய் அறிவிக்கிறது பாரதிதாசன் தமிழ்.

'அழகின் சிரிப்பில்' கதிர், நிலவு, கடல், காடு,மலைஆகியவற்றோடு தமிழையும் இயற்கையின் படைப்பாக முன்வைக்கின்றார்.

புனல் சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது மனித வாழ்வை
இனிய நற் றமிழே நீ தான்
எழுப்பினை

என்பது பாரததாசன் மணிமொழி

எனவே மொழியின் பிறப்பைத் தொன்மக் கண்ணாடியில் கண்ட பாரதியாரிடமிருந்து வேறுபடுகிறார் பாரதிதாசன். 'இயற்கை அன்னை அருளிய இன்றமிழ்' என அறிவியல் நோக்கில் அணுகும் சிறப்பு பாரதிதாசனின் தனித்தன்மையை உணர்த்தும். இருவரும் பிறந்து வளர்ந்த பின்புலம் இந்த வேறுபாட்டுக்குக் காரணமாகலாம்.

தமிழ், தமிழர், தமிழ் நாடு என மொழிப் புகழ்ச்சி கடந்த நோக்கை முதன் முதல் பாரதியார் முன் வைத்தார். திராவிடத் தோடு இணைத்துப் பார்க்க முயன்றாலும் பாரதிதாசனைத் தமிழ்த் தேசியமே வெல்கிறது.

தமிழில் அவர் பெற்றிருந்த புலமையும் அதன்பால் கொண்டிருந்த பற்றும் உள்ளத்தின் உணர்வில் ஒன்றிவிட்ட காரணத்தால் தமிழுக்கு அவர் கொடுத்த இடத்தைத் திராவிடத்திற்குத் தர முடியவில்லை.

(புரட்சிக் கவிஞர் தமிழ் தமிழன் தமிழ்நாடு, தமிழன்பன், ப. 84)

எனக் கவிஞர் தமிழன்பன் மதிப்பிடுவது மிகச் சரியானது.

உலகத் தமிழர் குறித்த மன உளைச்சல் பாரதிதாசனைவிடப் பாரதியாரிடம் மேலோங்கி இருப்பதைத் 'தமிழச் சாதி', 'கரும்புத் தோட்டத்திலே' கவிதைகள் புலப்படுத்தும். தமிழுக்குத் துறைதோறும் ஏற்பட வேண்டிய வளர்ச்சி குறித்துப் பாரதி பேசியிருந்தாலும் அந்த உணர்வை இயக்கமாக்கி மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் பாரதிதாசன் பேரளவு முன்னணியில் இருக்கிறார்.

வடமொழிக்கும் இந்திக்கும் எதிராகப் பாட்டுப் படையெடுப்பு நடத்தியவர் பாரதிதாசன். 'வேதம் பிறந்த தமிழ்நாடு', 'பன்னரும் உபநிடத நூல் எங்கள் நூலே' என்று பெருமிதம் கொண்டதன்றி, வேத ரிஷிகளின் கவிதை என ரிக்வேதத்தில் சில பகுதிகளையும், பகவத்கீதையையும் மொழி பெயர்த்தவர் பாரதியார். இந்த நோக்கில் பாரதி இந்தியக் கவிஞர். பாரதிதாசன் தமிழ் உணர்வுக் கவிஞர்.

பாரதியார் ஆங்கில, பிரெஞ்சு, வடமொழி இலக்கியங்கள் அறிந்தவர். சாகுந்தலத்தைப் பன்முறை தம் கவிதைகளில் புகழ்ந்தவர். காளிதாசன் எனத் தனக்கும் சகுந்தலா எனத் தன் மகளுக்கும் பெயர் சூட்டியவர். ஷெல்லி, பைரனிடம் மனம் பறிகொடுத்தவர். ஷெல்லிதாசன் எனப் பெயர் வைத்துக் கொண்டவர்.

தமிழில் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று மெய்சிலிர்த்தவர். அதே சமயம் இம் மூவரை வியப்பதற்குக் காரணத்தை விளக்கியவர்.

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லைஒன் றின்மை எனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்...

தமிழச் சாதியை அமரத் தன்மை வாய்ந்ததெனக் கருதியதாகக் காரணம் கூறுவார் பாரதியார்.

அவருக்குச் சங்க இலக்கியப் பயிற்சி இல்லை. அவர் காலத்தில் வெளிவந்த சங்க நூல்களைக் கூட அவர் கற்கும் வாய்ப்புப் பெறவில்லை.

ஆனால் பன்னரிய வேதங்கள், உபநிடதங்கள், பரவுபுகழ்ப் புராணங்கள் , இதிகாசங்கள் ஆகியவற்றை 'மின்னுகின்ற பேரொளி', 'காலம் கொன்ற விருந்து', 'கடவுளின் வெற்றி' என்று போற்றுகிறார்.

பாரதிதாசன் இதிகாச புராணங்களை ஏற்காதவர். 'பேதம் வளர்க்கப் பெரும் பெரும் புராணங்கள் சாதிச் சண்டை வளர்க்கத் தக்க இதிகாசங்கள்' என்பார். 'இராமாயணம் என்ற நலிவு தரும் கதை' என்பார்.

உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க இயலாது

என்று கடிந்து பேசுவார். வள்ளுவரையும் சங்கத் தமிழ் நூல்களையும் உச்சி மேல் வைத்து மெச்சுவார். தமிழைத் 'துய்யதான சங்கம் என்னும் தொட்டிலில் வளர்ந்த பிள்ளை' என்பார்.

நூலைப் படி சங்கத் தமிழ்
நூலைப் படி - முறைப்படி
நூலைப்படி
காலையில் படி
கடும்பகல் படி
மாலையில் படி
பொருள் படும் படி

நூலைப்படி என்று அறிவுறுத்துவது பாரதிதாசன் இயல்பு. சங்க இலக்கிய மரபே பாரதிதாசனின் இலக்கிய மரபு.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து' என்னும் பாரதியார் குரலை வழிமொழிந்து 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' என்று பாடியவர் பாரதிதாசன். 'துன்பம்

நேர்கையில்' என்ற சுவையான இசைப்பாடலில் வள்ளுவரைத் 'தமிழ் இறைவனார்' என்று போற்றுவார்.

'சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்' என்ற பாரதியைத் தொடர்ந்து சிலம்பிலும் அவர் கொண்ட ஈடுபாட்டால் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' காலத்துக்கேற்ற திருத்தங்களுடன் அவரிடம் புதிதாய்ப் பிறந்தது.

தமக்குத் தெரிந்த தமிழ் இலக்கியங்களைப் பாரதி பார்த்த பார்வைக் கோணம் வேறு. பாரதிதாசன் பார்த்த பகுத்தறிவுக் கண்ணோட்டம் வேறு. இந்தப் பார்வை காரணமாகத் தொல்காப்பியத்தையும் விமர்சித்தவர் பாரதிதாசன்.

பழமை என்பதனால் எதையும் ஏற்க இருவரும் ஒப்பியதில்லை.

முன்பி ருந்ததோர் காரணத் தாலே
மூடரே பொய்யை மெய்எனல் ஆமோ?

என்பது பாரதியின் வினா. புராணங்கள் கற்பனை எனப் பாரதி கருதினாலும் அதன் தொன்மக் கருத்தியலில் ஈடுபட்டார்.

'உயிர் பெற்ற தமிழரின் பாட்டு' கவிதையில்,

கடலினைத் தாவும் குரங்கும்-வெங்
கனலில் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்ததனாலே-தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டை முனியும்
கற்பனை என்பது கண்டோம்

என்பார் பாரதி. ஆயினும் நன்மை கூற எழுந்த கட்டுக்கதை என்றும் சொல்வார். இச்சிந்தனையின் இன்னொரு பரிமாணத்தைப் பாரதிதாசனிடம் காணலாம். இராமாயணத்தை வெறுத்த போதிலும் கவிதை அழகுக்காகக் கம்பனைக் 'கம்பனார்' என்று சிறப்பித்தார். தேவார திவ்விய பிரபந்தங்களைத் 'தேவாரம் திருவாய் நன் மொழியான தேன்' என்று தமிழுக்காக வியந்தார். மீனாட்சி அம்மையைப் பாடும் பிள்ளைத் தமிழ் தந்த குமரகுருபரரை 'அவதாரம்' என்றும், அவர் நாவில் முருகன் மந்திரம் எழுதிச் சென்றான் என்றும், அவருடைய பாடலை மீனாட்சியே பாராட்டினாள்

என்றும் எழுதுகிறார். குமரகுருபரரின் 'துறைத் தீந்தமிழில் ஒழுகும் நறும் சுவை'க்காகத் தம்மை நாத்திகர் என்று அறிவித்துக் கொண்ட பின்னும், பெரியாரியச் சுயமரியாதை இயக்கம் சார்ந்தபின்னும் 'எதிர்பாராத முத்தம்' நூலை வெளியிட்டார் என்றால் வேறு என்ன காரணம் கூற முடியும்!

தமிழுக்காகப் பகுத்தறிவுக் கொள்கையை எள் முனை அளவு தள்ளி வைக்கப் பாரதிதாசன் தயக்கம் காட்டவில்லை. இதை அவருடைய கொள்கையின் நெகிழ்ச்சி என்பதைவிடத் தமிழால் ஏற்பட்ட உள்ள நெகிழ்ச்சி என்று கூறுவதே பொருந்தும். எப்போதும் பாரதிதாசன் மதிப்பீட்டில் தனக்கென ஒரு அளவு கோலை வைத்திருந்தார்.

இதனால் தான் அடிப்படையான சில புரிதல்களில் மாறுபாடு இருந்த போதிலும் பாரதியை 'அய்யர்' என்று போற்றி நிற்பதில் அவர் இறுதிவரை உறுதியாக இருந்தார்.

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டா?

என்ற அவர் கேள்வி இந்த வகையில் பொருள் பொதிந்த கேள்வியாக நிலைக்கிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நூலகங்கள், கல்லூரிகள், வெளியீடுகள், துறைதோறும் தமிழ், மொழிபெயர்ப்பு என எண்ணற்ற கருத்துக்களைப் பாரதிதாசன் முன் வைக்கிறார்.

கவிஞர் பொன்னடியான் இது குறித்துத் தெரிவித்துள்ள அரிய செய்தி ஒன்று உண்டு. பாண்டியன் பரிசு திரைப்படம் எடுத்து அதில் கிடைக்கும் நிதியில் செய்யப் போவது என்ன என்று கவிஞர் சொன்னாராம்:

ஒன்று : போகாத வழியில் போய்க் கொண்டிருக்கும் திரைப்படத்துறையை நமது தமிழ்ச் சமூாயத்துக்குப் பயன்படும் சீர்திருத்தப் புரட்சிக்கூடமாக மாற்ற வேண்டும்.

இரண்டு: இந்தப் படத்தின் மூலமாகக் கிடைக்கின்ற வருவாயில் குறைந்தது இரண்டு இலக்க ரூபாயை ஒதுக்கித் தமிழுக்கு அறிவொளியூட்டும் பெரிய நூலகம் ஒன்றைச் சென்னையின் மையமான இடத்தில் அமைக்க வேண்டும்

அந்த நூலகத்தில் பல்துறை நூல்கள் சேகரிப்பு, முற்போக்கு இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு (பிற மொழியிலிருந்தும் தமிழ் மொழியிலிருந்தும்) வறுமைப்பட்ட எழுத்தாளருக்கு உதவி அனைத்தும் செய்யப்படவேண்டும்.

ஒரு தமிழ்க் கவிஞனின் ஆசை மனோரஞ்சிதத்தை எண்ணிப் பார்த்தால் மனம் சிலிர்க்கிறது.

அவருடைய நெஞ்சுக்கினிய நாயகரான பாரதியோ 1906ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் நாள் இந்தியா இதழில் ஒரு குறிப்பு வரைந்தார். தமிழ்ச் சங்கங்கள் என்ற தலைப்பில் மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிக் கூறியுள்ள செய்தி தொலைநோக்கின் அலை வீச்சாக இருக்கக் காணலாம்.

மதுரைச் சங்கம் ஒரு தமிழ் யுனிவர்சிட்டியாக மலர வேண்டும் என்பதே நமது நோக்கம்

என்கிறார் பாரதி. அதில் தமிழ் ஆராய்ச்சியுடன் பல துறை அறிவும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இக்கருத்தை வழிமொழிவது போல் 1926இல் சென்னை ராஜதானிச் சட்டமன்றத்தில் திருச்சியில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்று ஹவுஸ்மியான் என்ற உறுப்பினர் பேசி இருக்கிறார்.(1928)

1959ஆம் ஆண்டு (16.06.59) குயில் இதழில் எழுதியுள்ள 'பாருங்கள் அவர்களை' என்ற கட்டுரையில் பாரதிதாசன் இக்கருத்தை மீண்டும் வழிமொழிகிறார்.

> ***தமிழர் வரலாறு, தமிழின் தொன்மை, மேன்மை, தமிழிலக்கியம் உலகுக்கு இன்றியமையாமை அனைத்தினையும் உலகெலாம் பரப்பவும், தமிழகத்திலும் பிறநாடுகளிலும் தமிழ்க் கல்வியைப் பரப்பவும், தமிழ் மொழியை வைத்துப் பல்கலைக் கழகங்களைத் தமிழகத்தில் மாவட்டம் தோறும் நிறுவவும்***

திட்டம் தருகிறார் பாரதிதாசன் (ச.சு.இளங்கோ பதிப்பு, மானுடம் போற்று ப.234, 1984).

பாரதிக் கவிஞன் கட்டிய கனவு மாளிகை இதோ அவன் எழுதி எழுபத்தைந்தாண்டு கழித்தும் பாரதிதாசன் எழுதி இருபத்தைந்தாண்டுகள் கழித்தும் தமிழ்ப் பல்கலைக்கழகமாக நிறைவேறியிருக்கிறது.

இருபெரும் கவிஞரும் விரும்பித்தந்த வளர்ச்சித் திட்டங்கள் வியப்பினும் வியப்பு. எனினும் தீர்க்கதரிசனத்தில் குரு சீடரைத் தாண்டி நிற்கிறார் என்றே சொல்ல வேண்டும்.

◆

4 இயற்கை

இலக்கியக் கலைஞனின் பணிமனை இயற்கை. இயற்கையில் ஒரு பகுதியாக இருக்கும் மனிதன் அதனைப் பல சமயங்களில் உணராமலேயே விலகி நின்று பார்க்கிறான். வெல்ல முயல்கிறான். அது வேறு ஒரு பொருள் என்று கருதித் தன் எண்ணத்தால், எழுத்தால் தனக்கும் அதற்கும் பாலம் அமைக்க முயல்கிறான். தனக்கு எதிரானதோ இயற்கை எனச் சஞ்சலமுறுகிறான். தன்னை உணர்ந்த ஞானம் சித்திக்கும் போது அந்நியமாதலை ஒழித்துத் தானும் அதுவும் ஒன்று என்ற மேலான உணர்வைப் பெறுகிறான்.

கவிஞர்கள் தங்கள் படி நிலைகளுக்கும் அனுபவங்களுக்கும் பார்வைக் கூர்மைக்கும் ஏற்றவாறு இயற்கையை அடையாளம் காண்கிறார்கள். அதனுடன் உறவு கொள்கிறார்கள்.

குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும் பாலையுமாகச் சங்க இலக்கியம் இயற்கையின் கொடையாகப் பிறந்தது.

குருகும் உண்டு அவர் மணந்த ஞான்றே

என்று தலைவனின் சந்திப்புக்குக் குருகைத் தோழமையாக்கி நட்பாக்கும் கவிதைகள் உண்டு. (குறுந்தொகை)

நற்றிணையில் புன்னை மரத்தைத் தன் தமக்கை என்று உறவு பாராட்டிய பாடல் உண்டு. வீட்டில் நட்ட வயலைக் கொடி தொலைவில் உள்ள நாணலை நோக்கிப் படர்கிறது என்ற பொருளில் 'மனை நடு வயலை வேழம் சுற்றும்' என்று கூறி இல்லத்துக்குரிய தலைவனின் புறத்தொழுக்கத்தைச் சுட்டிக் காட்டும் உள்ளுறையாகவும் இயற்கை (ஐங்குறு நூறு மருதம் 11) இடம் பெறுவது உண்டு.

இன்னும் ஒரு படி மேலே சென்று, 'பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு' கண்டு பொருள் வயிற் பிரிந்த தலைவன் திரும்பி வருவான் என்று கருதும் தலைவி வாயிலாக இயற்கை அன்புப் பாடம் கற்றுத் தருவதாகவும் சங்கப் பாடல்கள் உள்ளன. (கலித்தொகை)

இயற்கை வழியே தெய்வீகம் காண்பதும் சங்க இலக்கியத்தில் உண்டு என்பதற்கு அடையாளம் திருமுருகாற்றுப் படை.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு

முருகனின் ஒளித் திருமேனி காட்சி தருவதாக நக்கீரர் கூறுகின்றார்.

சங்க இலக்கியம் தன் அகப்பாடல்களில் இயற்கையை மனித

உறவுகளின் களமாகக் கண்ட சீர்மை உடையது. புறப்பாடல்களில் பின்புலமாகவும், சில போது தெய்வத் தன்மை மிக்கதாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இசை இலக்கியமான பரிபாடல்,

தீயினுள் தெறல் நீ ; பூவினுள் நாற்றம் நீ ;
....
செஞ்சுடர் ஒளியும் நீ; திங்களுள் அளியும் நீ ;
அனைத்தும் நீ ; அனைத்தின் உட்பொருளும் நீ

என இயற்கைப் பொருளில் இறைவனைக் கண்டு மகிழும்.

நீதி இலக்கியத்தில் இயற்கை உவமைகளாகவே பயன்பட்டது.

காப்பிய இலக்கியத்தில் மலை, கடல், ஆறு, நாடு, இரு சுடர்த்தோற்றம் ஆகியன வருணிக்கப்படுவது கதையின் காட்சிக்கும் நாட்டு வள வர்ணனைக்கும் பயன்பட்டன. பாத்திரங்களின் உணர்ச்சிகளையும், கதை நிகழ்வுகளையும் கூர்மைப்படுத்தும் கருவியாக இயற்கை பயன்பட்டது. சிலம்பு, மணிமேகலையுள் இதனைக் காணலாம்.

கம்பன் காவியத்துள் கைகேயி இராமனைக் காடேகும்படி தசரதனிடம் வரம் பெற்ற பின் விடியற்காலை வருகிறது. இருள் கலைகிறது.

வாள் நிலா நகை மாதராள் செயல்
கண்டு மைந்தர் முன் நிற்கவும்
நாணினாள் என ஏகினாள் நளிர்
கங்குலாகிய நங்கையே

என இரவெனும் பெண் கைகேயி செயலுக்கு வெட்கமுற்று வெளியேறினாள் என்பார் கம்பர். அது போன்றே காலையில் தாமரைப் பூக்கள் மலர்ந்ததை இராமன் முடி சூடுவதைக் காண ஆசைப்பட்ட பெண்களின் முகங்கள் போல் மலர்ந்தன என்பார்:

காவல் மாமுடி சூடு பேரெழில்
காணலாம் எனும் ஆசை கூர்
பாவை மார் முகம் என்ன முன்னம்
மலர்ந்த பங்கய ராசியே

இத் தற்குறிப்பேற்ற உத்தியைக் கலிங்கத்துப் பரணி உயர்வு நவிற்சியாய் உயர்த்திப் பார்க்கும். தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பெரிய மாற்றமில்லை.

மனோன்மணீயம் சுந்தரனார் தான் நாஞ்சில் நாட்டு வருணனையாகவும், நடராசன் என்ற பாத்திரத்தின் அறிவியல் வியப்பாகவும் , சிவகாமி சரிதையில் அழகிய பின்புலமாகவும் இயற்கைக்குப் புதிய களத்தை அமைத்துத் தந்தார்.

கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தல் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா தீம்பால் துளிக்கும்

என வனப்பும் வளமுமாகச் சுந்தரனார் தரும் காட்சி இன்பங்கள் பல.

சின்னஞ் சிறிய கால்வாய் அலைகடலில் மலையையும் மலையில் அலை கடலையும் உருவாக்கும் புரட்சியை வியக்கிறான் நடராசன். நாங்கூழ்ப் புழுவையும் வியந்து,

உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை

என்று உரையாடும் நேர்த்தியில் இயற்கையும் மனிதனும் கொள்ளத்தக்க உறவை உணர்கிறோம்.

'சிவகாமி சரிதை' என்ற (நாடகத்துள் வரும்) நெடுங்கவிதையில் ஒரு தத்துவக் கதை கூறப்படுகிறது. ஒரு அற்புத நிகழ்வு நடைபெறப் போகிறது. இரவு வருகிறது. இந்திர சால வித்தைக்கு இடப்பட்ட கருந்திரையாக

இரவு வருகிறது. என்னவோ நடக்கப் போகிறது என்று நட்சத்திரங்கள் கண் சிமிட்டுகின்றன. வௌவால் அலைகிறது.

இந்திர நற் சால வித்தை எதுவோ ஒன்றியற்ற
இட்ட திரை எனத் திசைகள் எட்டும் இருள் விரிய
விந்தை நடப்பது தெரிக்க விளிப்பவரின் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடு பின் ஆட

அந்தி கடந்து இரவு வருகிறது. சிவகாமியும் சிதம்பரனும் ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளும் இனிய தருணத்துக்குப் பின்புலம் அமைக்கிறது இயற்கை.

சுந்தரனார் நாடகம் இயற்கை நயப்பையும் இயற்கை வனப்பையும் இயற்கைப் பின்புலத்தையும் மிக அருமையாகக் காட்சிக்கு வைக்கிறது.

இதன் தொடர்ச்சியாகத் தமிழ்க் கவிதையில் புதிய தடம் பதித்தவர்களாகப் பாரதியும் பாரதிதாசனும் அமைகின்றார்கள்.

இயற்கையை நயந்த இரு கவிஞர்கள்

பாரதிதாசனின் தொடக்க கால நூல்களான மயிலம் ஸ்ரீ சண்முகன் வண்ணப் பாட்டு (1920) ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம் (1925) மயிலம் சுப்பிரமணியர் துதியமுது (1926) ஆகியவற்றில் முதன்மை இடம் பக்திக்கே. 1930இல் கதர் இராட்டினப்பாட்டு (1930) சிறுவர் சிறுமியர் தேசிய கீதம் (1930) தொண்டர் படைப்பாட்டு (1930) ஆகியவற்றில் முக்கியத்துவம் தரப்படுவது தேசியத்துக்கே. இவற்றில் இயற்கை தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வாய்ப்பு இல்லை.

எனினும் 'சுப்பிரமணியர் துதியமுது' நூலில் மழை பெய்து வெள்ளப் பெருக்கெடுக்கும் காட்சி ஒன்று மனதை ஈர்க்கிறது.

மலைவிட்டு நீங்கிப் பொன்
அலை கொட்டி மூங்கிலின்
குல முற்றும் வாங்கிப் பன்
மலரிட்டு வேங்கையின்
தலைமுட்டு நதிவெள்ளமே – ஏரி
குளம் குட்டை அவை உள்ளுமே – இரு
நிலமுற்றும் குதி கொள்ளுமே

இயற்கையை மறவாத பக்தியுள்ளம் கொண்ட ஓர் இளங்கவிஞரை அதில் காணலாம்.

இந்த நூல்கள் இயற்றப்படுமுன்னரே பாரதியாருடன் நடந்த சந்திப்பு ஒன்றில் நம் கவிஞர், 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று இயற்கையில் இறைவியைக் கண்டு பாடியுள்ளார், ஆனாலும் 'சஞ்சீவி பருவதத்தின் சாரல்' , 1930 இல் எழுதப்பட்டு அவருடைய அசலான கவிதை முகம் புலப்படத் தொடங்கும் வரை இயற்கை அவரிடம் விலகியே இருந்தது.

அதன் பின் 'அழகின் சிரிப்பு' என்ற இயற்கைத் திருமாளிகையை 1943/44 இல் அவர் கட்டி முடிக்கும் சாதனையும், தொடர்ந்து எண்ணற்ற இயற்கைக் கவிதைகளும் அவரிடம் ஆழி அலைகளெனக் கிளர்ந்தெழுந்தன. நவீன தமிழ்க் கவிதையில் இயற்கையை இத்துணை வண்ணங்களில் பாடியவர்கள் எவரும் இலர்.

பாரதிதாசனின் இயற்கை குறித்த எண்ணங்களைக் காணுமுன் பாரதி குறித்து அறிந்து கொள்வது பயனுடையதாக இருக்கும்.

பாரதியார் ஆங்கிலப் புனைவியல் கவிஞர்களைக் கற்று உணர்ந்தவர். வடமொழிப் படைப்புகளையும் அறிந்தவர். இயற்கையை அனுபவித்து அதன் பேரழகில் லயித்துக் கிடப்பதற்கென்றே கடற்கரையையும், சோலைகளையும் விரும்பித் தேடிச் சென்றவர்.

'பாஞ்சாலி சபதம்' காவியத்தில் அருச்சுனனும் பாஞ்சாலியும் ஒரு மாலைப் பொழுதில் கதிரவன் மறையும் கோலத்தைக் கண்டு மகிழ்ந்த காட்சியை வரைகின்றார் பாரதியார். அந்த அழகுப் பிரளயமான கவிதைக்கு ஒரு குறிப்புரையும் பாரதியார் எழுதியிருக்கின்றார். 'சூர்யாஸ்தமன' வருணனை கூறப்பட்டுள்ளதை விளக்கும் பொருட்டு 'கர்மயோகி' இதழில் தாம் எழுதிய அதே தலைப்புள்ள ஒரு கட்டுரையை எடுத்துக் காட்டுகின்றார். அந்த அரிய கட்டுரையின் தொடக்கம் வருமாறு:

> ***உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந் தோறும் குளக்கரைகளிற் போய் கருடன் பார்ப்பதற்கென்றால் நம்மவர்கள் கூட்டம் கூட்டமாக ஓடுகிறார்கள். சூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன் கூடப் போகிறதில்லை...***
>
> ***சகோதரா, சூர்யாஸ்தமனத்தின் விநோதங்களைச் சென்று பார். சூர்யனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி என்ற குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. சூர்யனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே***

இயற்கை அழகில் லயிக்கும் மனப்பக்குவத்தை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பாரதி வலியுறுத்துகின்றார்.

முழுமையான இயற்கைப் படைப்பான அழகின் சிரிப்பு முன்னுரையில் பாரதிதாசன் கூறுவார்:

> ***இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும் கதிரென்றும் சிரித்தது.***

காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும் தமிழர்கள்.

இந்த முன்னுரைக் குறிப்பில் முன்னவரை அடியொற்றிப் பின்னவர் தமிழருக்கு அறிவுரை கூறுவதை அவதானிக்கலாம்.

இனி, இயற்கையை நோக்கிய இருபெருங்கவிஞர்களின் அணுகுமுறையைக் காண்போம்.

இயற்கையின் பன்முகம்

கவிஞர்கள் இயற்கையைப் பல்வேறு வகைகளில் அணுகியிருக்கிறார்கள். இயற்கைதரும் இன்பத்தைப் புகழ்தல், இயற்கையைச் சரண் அடைதல், இயற்கையை மனித நிகழ்வுகளுக்குப் பின்புலமாக்குதல், இயற்கைக்கு மனிதப் பண்புகளை ஏற்றல், இயற்கையைத் தெய்வீக ஆற்றல்களின் அடையாளம் ஆக்குதல், இயற்கைக்கும் ஆன்மா உண்டெனக் கருதுதல், இயற்கையை ஆசானாக எண்ணுதல் எனப் பல நிலைகளில் கவிஞர்கள் இயற்கையுடன் உறவாடியுள்ளனர்.

பாரதியும் பாரதிதாசனும் தமிழின் முதல் புனைவியல் கவிஞர்கள். புனைவியலோடு நடப்பியலைப் பின்னிய கவிதைகள் அவர்களுடையவை.

பொதுவாகப் புனைவியல் கவிஞர்கள் இயற்கையில் ஆறுதல் காணும் இயல்புடையவர்கள். சுற்றிலுமுள்ள வாழ்க்கையின் அவலங்களிலிருந்து விலகிப் போய் இயற்கையைச் சரணடையும் போக்கு உடையவர்கள்.

நடைமுறையில் உள்ள சமுதாயத்தின் மீது தம் புரட்சியுணர்வில் பூத்த ஐயத்தால், தம் கற்பனை மனம் தூண்ட இயற்கையோடு உறவு கொண்டவர்கள் புனைவியல் கவிஞர்கள். மானுட உலகம் கொடூரமும் வெறுக்கத்தக்கதுமாகத் தோன்றும் போது, கடும் சீர்திருத்தமும் உதவாது என்ற நிலையில் மாறுதல் தேவைப்படாத இயற்கை உலகில் ஆறுதல் கொள்கிறார்கள்

(Graham Hough, The Romantic path, 1968).

தலைசிறந்த இலக்கிய ஆய்வாளரான சி.எம். பௌரா மிக அழகாகக் கூறுவார்:

எல்லாப் புனைவியல் கவிஞர்களும் தங்கள் தொடக்க காலத் தூண்டுதலை இயற்கையிலிருந்தே பெற்றார்கள். இயற்கையே அவர்களுக்கு எல்லாம் என்பதற்கில்லை. ஆனால் இயற்கை இன்றேல் அவர்கள் இல்லை. காட்சியிலிருந்து தரிசனத்துக்கு அவர்கள் இடம் பெயர்ந்த போது இயற்கையின் மூலமே உன்னத கணங்களைக் கண்டறிந்தார்கள். பிரபஞ்ச ரகசியங்களுக்குள் நுழைந்து விட்டதாய் எண்ணினார்கள்.

(C.M.Bowra, The Heritage of Symbolism 1959).

இந்த அடிப்படைகளை நினைவில் கொண்டு பாரதிதாசனிடம், பாரதியினூடே உயிர்த்து, முற்றிலும் புதிதாய் வேறுபட்டு, அடையாளம் கண்ட இயற்கையின் கோலங்களை எண்ணிப் பார்க்கலாம்.

ஆங்கில இலக்கியத்தில புனைவியல் கவிஞர்களாக ஷெல்லி, கீட்ஸ், பைரன், வேர்ட்ஸ் வொர்த் ஆகியோரைக் குறிப்பிடலாம். அவர்களுள் இயற்கைக் கவிஞர் என்றால் அது வேர்ட்ஸ் வொர்த்தை மட்டுமே குறிக்கும்.

பாரதி, பாரதிதாசன் இவ்விருவரிடையே யார் இயற்கைக் கவிஞர் என்ற வினாவை வைத்தால் சிலர் பாரதிதாசன் என்று பதில் இறுத்தல் கூடும். 'அழகின் சிரிப்பு' என்ற தனி நூலை இயற்கைப் புனைவுக்கு எனத் தனியே படைத்திருப்பதால் இவ்வாறு கருத்துரைக்க வாய்ப்புண்டு. அவ்வாறாயின் காட்சி, சக்தி, காற்று, கடல் என்ற தலைப்புகளில் பாரதி எழுதிய புதுக்கவிதைப் பரிசோதனைப் படைப்புகள் முழுமையும் இயற்கையையே மையமாகக் கொண்டவை. இயற்கையின் பன்முகத் தரிசனங்களாக அமைந்தவை என்பதையும் சிந்திக்க வேண்டும்.

எனவே, இயற்கைக் கவிஞர்கள் எனில் இருவரும் அவ்வகையினரே. ஆயினும் இவர்களின் களங்கள் அரசியல் விடுதலை, சமுதாய விடுதலை என வேறு தளங்களில் விரிவாக்கம் கொண்டிருப்பதால் இயற்கைப் புனைவை விரும்பிச் செய்த கவிஞர்கள் என்று கருதுவதே சரியாக இருக்கும்

இயற்கையில் இன்பம்

வேறு எவ்வகை நோக்கும் இன்றி இயற்கையின் அழகை மட்டுமே முதன்மைப் படுத்தி எழுதும் பாங்கு இருபெருங் கவிஞர்களிடமும் உண்டு. 'A Thing of Beauty is a Joy for ever' என்ற கீட்சின் சித்தாந்தம் தான் இது. குயில் பாட்டின் இடையிடையே மனதை மயக்கும் வருணனைகள் பல உண்டு. தொடக்கத்திலேயே

காலை இளம் பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடல் ஓர் நெருப்பெதிரே சேர் மணிபோல்
மோகனமாம் சோதி பொருந்தி

எனக் காலைக் கதிரின் அழகு மனதை மயக்கும். மற்றோரிடத்தில் அதே கதிரவனை

தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ

என வியப்பார். இன்னும் பரவசமய்,

புல்லை நகையுறுத்தி, பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதி

என அழகு கொஞ்சக் கொஞ்ச வைகறை ஞாயிற்றை வாழ்த்துவார்.

குயில் பாட்டின் 'காலை இளம்பரிதி' என்ற தொடர் பாரதிதாசன் மனதில் தீயாய்ப் பற்றிக் கொள்கிறது. அழகின் சிரிப்பு அத்தொடரிலேயே ஆரம்பமாகிறது – 'காலை இளம் பரிதியிலே அவளைக் கண்டேன்' என.

இயற்கை அழகை அதன் உள்ளார்ந்த அழகுக்காவே பாடும் இடங்கள் பாரதிதாசனில் மெத்த உண்டு.

சஞ்சீவி பருவதத்தின் சாரலின் தொடக்கம் அழகு வெள்ளமாகப் பொங்கிப் பெருகுகிறது.

குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயில் ஆடிக் கொண்டிருக்கும் ; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் ; கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு ; கனி மரங்கள் மிக்க உண்டு

என்ற தொடக்கம் நெஞ்சைக் கவ்வுகிறது.

கருத்தளவில் மூட நம்பிக்கைக்கு எதிரான முற்றுகையாக சஞ்சீவி பருவதத்தின் சாரல் திகழ்ந்தாலும், குயில் கூவும் பாரதியின் மாஞ்சோலை இந்த நெடும் பாடலைத் தூண்டியிருக்குமோ என்று தோன்றுகிறது. இது ஒரு ஊகம்.

பாரதிக்குக் காலைப் பொழுதினிலே கண்விழிக்கும் ஞாயிறு போல அந்திமாலை [illegible] எழுச்சி தரும அழகுக் காட்சிதான். பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலிக்கு அர்ச்சுனன் மாலைக் கதிரின் மறைவைச் சுட்டிக் காட்டுகிறான்.

பாரடியோ வானத்தில் புதுமை எல்லாம்
பண்மொழீ கணந்தோறும் மாறி மாறி
ஓரடி மற் றோரடியோடு ஒத்தல் இன்றி
உவகையுற நவநவமாத் தோன்றும் காட்சி

என்று வர்ணித்துக் கொண்டே போய், காட்சி இன்பத்தில் தன்னை இழந்த பாரதி எண்சீர் விருத்தத்தை விட்டு ஆசிரியப்பாவுக்கு மாறி...

பார் சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடி இந்த வண்ணத் தியல்புகள்
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! – செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமே
எரிந்திடும் தங்கத் தீவுகள் – பாரடீ
நீலப் பொய்கைகள்!

என்று மயங்கக் கிறங்குவார். இப்படிப் பல இடங்களில் கதிரவனை வாழ்த்தும் பாரதிக்கு மனதுக்குள் காலைப் பொழுதை வணங்கும் காயத்ரி மந்திரமும் தூண்டுதலாக இருந்திருக்கலாம்.

இவ்வாறு இயற்கை அழகை மனமார நுகர்வதற்கு மட்டும் எனப் பாரதி எழுதிய கவிதைகள் எண்ணிக்கையில் மிகுதி இல்லை.

ஆனால் பாரதிதாசனிடம் இத்தகைய கவிதைகள் அதிகமாய்ப் பிறந்துள்ளன. இயற்கை அழகைப் பாரடீ, பாரடா என்று சொல்லும் இடங்களும் மிகப் பல. பாரதி பாரடி, பாரடி என்று பாஞ்சாலியை நோக்கிக் கூறும் சொல் பாரதிதாசனிடம் பதிவுற்றது போலும். சஞ்சீவி பருவதத்தின் சாரலில்

பாரடி மேற்றிசையில் சூரியன் பாய்கின்றான்
சார்ந்த ஒளிதான் தகத்தகாயக் காட்சி

என்று சொல்லுவதும்,

அழகின் சிரிப்பில், 'பாராய் தம்பி', 'பாரடா நீ' என்று கூறுவதும் பாரதியை மெல்லிய கோடாய் ஞாபகப் படுத்துகின்றன.

எந்த நோக்கமும் இன்றி அழகை அழகுக்காகவே ரசிக்கும் இயற்கைக் கவிதைகள் பாரதிதாசனிடம் நிறையவே உள்ளன. 'சிரிக்கும் முல்லை 'ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன் குளிர்ந்த தென்றல் வந்தது
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்
சோலை நடுவில் சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக் கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே

இக்கவிதையில் இயற்கைக் காட்சி தந்த மகிழ்ச்சி ஒரு மௌன ராகமென மனதில் தேன் வார்க்கிறது.இவ்வாறே 'காடு', கண்முன், கிளை விரித்து நிற்கிறது.

வானிடை ஓர் வானடர்ந்த வாறு - பெரு
வண்கிளை மரங்கள் என்ன வீறு - நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னை மரம் ஊற்றியதும்
ஆறு - இன்பச்
சாறு

அழகின் சிரிப்பில் முதல் கவிதையே இயற்கையில் அழகு என்பாள் கவிதை தந்த காட்சியைக் கூறுகிறது. குன்றம் என்ற கவிதையில் காட்சி இன்பங்கள் கொள்ளை கொள்ளையாய்க் கொட்டப்படுகின்றன.

அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்கொடி பச்சைப் பட்டே

குருவிகள் தங்கக் கட்டி
குளிர் மலர் மணியின் குப்பை
எருதின் மேல் பாயும் வேங்கை
நிலவு மேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளி சேர் தங்கத்
தகடுகள் பாரடா நீ

இயல்பு நவிற்சி கடந்த புனைவு நவிற்சியென்ற போதிலும் அழகின் அடுக்குகளாய் வரிகள் விரிகின்றன.

இரண்டு புறாக்கள் ஒன்றாக இறையுண்பதை 'ஒரு பக்கம் இரு வாழைப்பூ , உயிருள்ள அழகின் மேய்ச்சல்' என்பார். இப்படி இயற்கையின் இன்ப ஓவியங்கள் பலப்பல.

அவரே ஓரிடத்தில் குறிப்பது போல,

என்னை நான் இழந்தேன் ; இன்ப
உலகத்தில் வாழ லுற்றேன்
பொன் துகள் தென்றல் காற்று
புதுமணம் வண்டின் பாட்டு
பன்னூறு செழு மாணிக்கப்
பறவை போல் கூட்டப் பூக்கள்
இன்றெலாம் பார்த்திட் டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே

இந்த அழகு அனுபவத்தைப் பேச இயற்கையைப் பயன்படுத்துவதில் பாரதியும் பாரதிதாசனும் ஒன்றுபடுகிறார்கள். ஆயினும் இத்தகைய கவிதைகள் பாரதிதாசனிடம் மிகுதி என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இயற்கை ஓர் ஆசிரியன்

இயற்கை நமக்கு ஆசிரியன் என்று கவிஞர் வேர்ட்ஸ் வொர்த் கூறுவார். அவருடைய கவிதை ஒன்றில் அவர் கூறுகின்றார்:

" Come, hear the woodland linnet
How sweet his music! on my life
There's more wisdom in it
And hark, how blithe the throstle sings
He too is no mean preacher
Come forth into the light of things
Let Nature be your teacher"

காட்டுப் பறவையின் சங்கீதக் குரலில் ஒரு கருத்து இருப்பதாகவும், புதர்க் குருவியின் பாட்டில் ஒரு செய்தி இருப்பதாகவும் சொல்லும் வேர்ட்ஸ் வொர்த் இயற்கை நம் ஆசிரியன் என்கிறார்.

பாரதியின் இயற்கைப் பாடல்களில் இந்தக் கூறு தெளிவுறக் காணப்படுகிறது. 'பகைவனுக் கருள்வாய்' என்ற உன்னதமான கருத்தைப் பெற்றுத் தந்தது இயற்கை என்கிறார் கவிஞர்.

புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியில் கண்டோமே - நன்னெஞ்சே
பூமியில் கண்டோமே
பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழ்கிறான் - நன் னெஞ்சே
பரமன் வாழ்கிறான்

இப்படியே சிப்பியில் முத்தும், குப்பையில் குருக்கத்தியும் இருப்பது போல் பகை நடுவில் அன்பு விளங்குவதான பாடத்தையும் கூறுகிறார் பாரதிக் கவிஞர்.

'நிலாவும் வான்மீனும் காற்றும்', என்ற அழகுக் களி தாண்டவமாடும் பாடலில், 'குலாவும் அமுதக் குழம்பைக்

குடித்தொரு கோல வெறி படைத்தோம்' என்று மனதை இன்ப வெறியில் ஆழ்த்துகிறார். பாடலின் இறுதியில் காற்றுடன் உரையாடுகிறார். காற்றை வியக்கிறார். காற்று கொண்டுவரும் ஓசைகளைப் பட்டியலிடுகிறார்.

நண்ணி வரும் மணியோசையும் - பின்னங்கு
நாய்கள் குரைப்பதுவும்
எண்ணு முன்னே அன்னக்காவடி பிச்சையென்
றேங்கிடுவோன் குரலும்

எனப் பல ஓசைகளைக் கொண்டு வருகிறது காற்று. தொடர்ந்து வீதிக்கதவை அடைக்கும் ஒலி, விம்மிடும் சங்கொலி, வீண்வாதம் பேசுவோர் குரல், குழந்தையின் அழுகை என ஓசைகளின் ஊர்வலமாகக் காற்றை அமைக்கின்றார்.

அழகில் தொடங்கிய கவிதை சமுதாயத்தின் குறுக்கு வெட்டாகிறது. பிச்சை, பிச்சை மறுப்பு, வீண் பேச்சு, குழந்தை அழுகை மூலம் வாழ்வின் அவலங்கள் முன் வைக்கப்படுகின்றன. கவிதை சமுதாயக் கவலைகள் என்ற கருத்தை நோக்கி நகர்கிறது.

இவ்வாறே 'காலைப் பொழுது' என்ற கவிதையில் காக்கை, குருவி, கிளி ஆகிய பறவைகள் உரையாடுகின்றன. அவ்வுரையாடலில் சோவியத் புரட்சி நாயகன் லெனினை, 'கற்றறிந்த ஞானி' என்று போற்றி,

சோற்றுக்குப் பஞ்சமில்லை போரில்லை
துன்பமில்லை
போற்றற்குரியான் புது மன்னன்
காணீரோ"

என்ற வரலாற்றுச் செய்தி இயற்கைக் காட்சியில் பொங்கிவரும் கருத்தாக அமைகிறது. அப் புதுமன்னன் லெனின் எனத் தா.பாண்டியன் அடையாளம் காண்கிறார்.

பாரதிதாசனும் இயற்கையைச் சித்திரமாக்கி அதன் ஆதார சுருதியாக ஓர் அருங்கருத்தைச் சொல்வதில் வல்லவராகத் திகழ்கிறார். அழகின் சிரிப்பிலேயே இதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் கூறலாம்.

வானத்தில் விண் மீன்கள் மின்னுகின்றன. அதனைக் குறித்துத் தற்குறிப்பேற்றமாக அவை நட்சத்திரங்கள் அல்ல. மண்ணுலகில் வலுத்தவன் இளைத்தவன் மீது இழைக்கும் கொடுமை கண்டு வானம் கொண்ட கொப்புளங்கள் என்கிறார்.

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராமி தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி

என்பது பாடல். இது போன்றே வட்டமாகப் புறாக்கள் இரையுண்ணும் காட்சியை எடுத்துக் காட்டி ஒரு பாடத்தை நமக்குச் சொல்கிறார். புறாக்களிடையே ஒன்றுபட்டுண்ணும் ஒற்றுமை நிலவுவதைக் காட்டி மனிதக் கும்பல் சாதியால் இனத்தால் ஏற்றத் தாழ்வால் மாறுபட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும் அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்தும் இல்லை
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கம் இல்லை

என மனித இனத்துக்குப் பறவைகள் கற்றுக் கொடுக்கும் பாடத்தை விளக்குவார். மயில் நீண்ட கழுத்துடன் இருப்பதற்குக் காரணம் அண்டை அயலான் வீட்டில் நடப்பதைப் பெண்களைப் போல் எட்டிப் பார்க்காதிருப்பதால் தான் என்று சொல்லிப் புறங்கூறும் பெண்ணியல்பைக் கண்டிப்பார்.

(பா.தா. கவிதைகள் 1).

'மக்கள் நிலை' என்ற கவிதையில் சிட்டுக்களும், அணிலும் காதல் புரிவதில் கவலையற்றிருக்க, மனிதர் மட்டும் வறுமையால் காதலைக் கைவிடும் அவலத்தைச் சித்திரிப்பார் பாரதிதாசன்.

தென்னை மரத்தில் –சிட்டு
பின்னும் அழைக்கும் – ஒரு
புன்னை மரத்தினில் ஓடிய காதலி
போ போ என்றுரைக்கும்

ஆனாலும் காதலன் வேண்டியதும் பெட்டை தென்னையில் கூடிப் பின் புன்னையில் பாய்கிறதாம். அணில் மேல் கிளையிலிருந்து பாய்ந்து காதலி அணிலுடன் காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக் கலந்திடுகிறது இன்பத்திலே. இப்படித்தான் வான் மழையும் முல்லையும் கலந்துறவாடுகின்றன.

ஆனால் மனிதனோ காதலைக் கண்டு மிரள்கிறான் ; அஞ்சுகிறான் ; மனம் குமைகின்றான்.

பஞ்சைப் பரம்பரை நாமடி – பிள்ளைகள்
பற்பலர் ஏதுக் கென்பான்

இந்த நிலை குறித்துக் கவிஞர் வருந்தி வினவுகிறார் :

கஞ்சி பறித்தார் – எழுங்
காதல் பறித்தார் – கெட்ட
வஞ்சகம் சேர் சின்ன மானுட சாதிக்கு
வாய்த்த நிலை இதுவோ

இயற்கை தரும் இன்பங்களுக்கு அப்பால் அது கற்றுக் கொடுக்கும் பாடங்களை எடுத்துக் கூறுகிறார்கள் இரண்டு கவிஞர்களும். எனினும் பாரதிதாசன் பாரதியை இவ்வகையில் மேலும் செழுமை செய்திருக்கிறார் எனக் கூறுதல் தகும்.

இயற்கையும் மனிதனும்

இயற்கைக்கு மனிதத் தன்மை ஊட்டுதலும், இயற்கையை மனித நிகழ்வுகளுக்குப் பின்புலம் ஆக்குதலும் கவிஞர்கள் காலம் காலமாகக் கையாளும் இலக்கிய உத்திகள்.

பாரதியின் மிகச் சிறந்த கவிதைப் படைப்பு குயில். இந்த நெடும் பாட்டில் ஒரு மாபெரும் உருவகம் அமைந்திருக்கிறது. அந்த உருவகத்தின் விளக்கம் ஆய்வாளருக்கு ஆய்வாளர் மாறுபடுகிறது. உண்மையில் இந்த மாறுபாடே அக்கவிதையின் தனித்துவமாகிறது. இந்த அருமையான படைப்பில் இயற்கைப் படைப்புகளை மனிதமயப்படுத்தும் தன்மை மிகக் கூர்மையாகக் கையாளப்பட்டுள்ளது.

குயில் ஒரு மானுடப் பெண்ணின் மறுவடிவமாக, மாடனும் குரங்கனும் இத் தலைவிக்கு விளைந்த சோதனைக்குக் காரணமான கொடியவர்களாக மீட்டுருவாக்கம் செய்யப்பட்டிருக்கக் காணலாம். குயிலின் பாடலைக் கேட்கும் போது கவிஞர்,

மனித உரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ

என்று மயங்குகிறார். மாயக் குயிலோ,

சிறியதொரு புள்ளாய்ச் சிறியேன் பிறந்திடினும்
தேவர் கருணையிலோ தெய்வச் சினத்தாலோ
யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன்
மானுடவர் நெஞ்ச வழக்கெல்லாம் தேர்ந்திட்டேன்

என்று பேசுகிறது.

இந்த ரசவாதம் பாரதியின் தனித் தன்மையாகக் குயில் பாட்டில் ஓங்குகிறது.

இது போன்றே மனித நிகழ்வுகளுக்கு இயற்கையைப் பின்புலமாக்குகிற (pathetic fallacy) கலையிலும் பாரதி ஈடுபாடு காட்டுகின்றார். குயில் பாட்டில் நிகழ்கின்ற கதைக்கு ஏற்ப இயற்கை தன்னை உருமாற்றிக் கொள்கிறது.

குயில் தன் கதை சொல்லி முடிக்கும் தருணத்தில் மாஞ்சோலையில் காணாமல் போயிருந்த பறவைகள் திரும்பி வந்து விடுகின்றன.

அத்தருணத்தே பறவை அத்தனையும் தாம் திரும்பி
சோலைக் கிளையிலெல்லாம் தோன்றி ஒலித்தனவால்

இதே போன்று குயிலைக் கண்டு பேசக் கவிஞர் மாஞ்சோலைக்குள் நுழைந்ததும் அப்பறவைகள் காணாமல் போய்விடுகின்றன.

பச்சை மரமெல்லாம் பளபளென என்னுளத்தின்
இச்சை உணர்ந்தனபோல் ஈண்டும் பறவையெலாம்
வேறெங்கோ போயிருப்ப

என்று பின் புலத்தில் காட்சி மாற்றம் நிகழ்ந்து விடுகிறது.

'பாஞ்சாலி சபதம்' என்ற குறியீட்டுக் காப்பியத்தின் உச்சியாக அமைவது பாஞ்சாலி செய்கிற சபதம். துரியோதனன், துச்சாதனன் ஆகியோரது குருதியைப் பூசிய பின்னரே என் குழலை முடிப்பேன்; அது செய்யுமுன்னே முடியேன் என்று சபதம் செய்கிற சூழல். இந்தப் பெண்மையின் வீறு ததும்பும் சபதத்தில் இயற்கையும் ஈடுபடுகிறது.

பாஞ்சாலி 'பாவி துச்சாதனர் செந்நீர் அப்பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்' மேவி இரண்டும் கலந்து சீவிக் குழல் முடிப்பேன் என்று சபதம் செய்கிறாள். அப்போது...

ஓம் ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமி அதிர்ச்சி உண்டாச்சு - விண்ணைப்
பூழிப் படுத்திய தாம்சுழல் காற்று

மாமனித நாடகத்துக்கு இயற்கை மாறி மாறித் திரைச் சீலையாகிறது பாரதி கவிதையில்.

இயற்கையை மிக விரிவாகவே பாடியிருக்கிற பாரதிதாசனின் கவிதைகளிலும் இந்தக் கூறுகளை அடையாளம் காண முடியும். புகழாரம் சூடியிருக்கும் பாரதிதாசனின் 'நீங்களே

சொல்லுங்கள்' என்ற கவிதை இத்தகைய ஒரு வெளிப்பாடு. சித்திரச் சோலைகளையும், நெல்விளை நிலத்தையும், தாமரைத் தடாகங்களையும் முன்வைத்து அவை மனிதனும் இயற்கையும் கூடிக் கலந்ததனால் விளைந்த சாதனை என்பார்.

சித்திரச் சோலைகளே - உமை
நன்கு திருத்த இப்பாரினிலே - முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே

இங்கே மனித மயப்படுத்துவதை விடவும் இயற்கை மனித வயப்படும் நிலை முன் வைக்கப்படுகின்றது எனலாம்.

கூண்டில் கிடக்கும் கிளியோடு உரையாடும் இன்னொரு கவிதை சுதந்திரத்தின் அருமையை - வெளியே பறக்கும் மற்றொரு கிளியின் மூலம் உணர்த்துகிறது.

தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்கு
பொன்னே மணியே என்றுனைப் புகழ்வார்
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூசல் ஆடி
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வானும் மண்ணும் தன் வசத்தில் கொண்டாள்

என்று சுட்டிக் காட்டும் போது மனித உலகின் கூண்டுக் கிளிகள் நினைவுறுத்தப்படுகின்றனர். விடுதலை மனிதருக்கும் பறவைகளுக்குமான உயிர்ப் பண்பு என்பதை இவ்வரிகளில் புலப்படுத்துகின்றார் ஆணித்தரமாக...

தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்

அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே

இலக்கை நோக்கிப் பாயும் அம்பு போல் எழுகிறது வினா. கிளியிடம் நடத்தும் உரையாடல் உண்மையில் மனிதரிடம் நடத்தும் உரையாடலாகப் பரிணமிக்கிறது.

மனித நிகழ்வுகளுக்கு இயற்கை பின்புலமாக அமைவது பெருங்கவிஞர் பலரிடமும் காணப்படும் பண்பேயாகும். பாரதிதாசனின் 'ரோமியோ ஜூலியட்' என்று திறனாய்வாளர்கள் (கா. செல்லப்பன்) கருதும் காதல் சித்திரம் 'எதிர்பாராத முத்தம்'

தன் மகள் பூங்கொடி தனக்குப் பகையான குடும்பத்துப் பிள்ளை பொன்முடியைக் காதலிப்பதைத் தந்தை மறைநாய்கன் ஏற்கவில்லை. ஒரு நாள் அவனை மரத்தில் கட்டி வைத்து அடிக்கிறான். காலைப் பொழுது விடிகிறது. அதைச் சொல்ல வந்த கவிஞர்,

இவன் செயலை
வல்லிருளும் கண்டு சிரித்தது போல்
காலை அரும்பிற்று

என்பார். இயற்கை கதையில் ஒரு பாத்திரமாய்ப் பங்கேற்றுவிடுகிறது.

மற்றொரு நாள் காதலனின் பிரிவைத் தாங்காத பூங்கொடி தன் வீட்டுக் கொல்லையில் முன்னொரு நாள் காதலனைக் கட்டி வைத்து அடித்த புன்னை மரத்தை இரவெல்லாம் கட்டித் தழுவிக் கண்ணீர் விடுகிறாள். நெஞ்சை நெகிழ வைக்கும் இக்காட்சியைப் பாரதிதாசன் மிக நேர்த்தியாக வரைந்து காட்டுகிறார்:

.... ஓடி மரத்தைத் தழுவித்தன்
கூந்தல் அவிழக் குளிர் விழியில் நீர் பெருக
ஆந்தைபோல் தந்தை அலறி மிலா றெடுத்துப்
பொன்னுடம்பு நோகப் புடைக்க அவரைப் பிணித்த
புன்னை இதுதான்! புடைத்ததுவும் இவ்விருள் தான்

தொட்ட போதெல்லாம் சுவையேறும் நல்லுடம்பை
விட்ட போதின்ப வெறியெடுக்கும் காதல் மெய்யைக்
கட்டிவைத்த காரணத்தால் புன்னை நீ காரிகை நான்
ஒட்டுறவு கொண்டு விட்டோம், தந்தை ஒரு பகைவன்"

(இயல் 16)

இவ்வாறு பூங்கொடி புன்னையைத் தன் பகுதியாக அல்ல, தானாகவே உணர்கிறாள். தன் நிலை மறந்து போகிறாள்.

இந்த வரிகளில் இயற்கை பின்புலமாகிறது என்பது மட்டுமல்ல, சங்க காலத் தலைவி புன்னையைச் சகோதரி என்றது போல் பூங்கொடி அதனைத் தானாகவே உணரும் பாங்கும் அறிந்து மகிழத் தக்கது.

அழகின் சிரிப்பில் உள்ள 'செந்தாமரை' கவிதையில் தாமரையின் இதழ்களை உவமைகளால் அணி செய்யும் போது மனித உறவின் இதழ்கள் விரிகின்றன.

ஓரிதழ் குழந்தை கன்னம்
ஓரிதழ் விழியை ஒக்கும்
ஓரிதழ் தன்ம ணாளன்
உருவினைக் கண்டு கண்டு
பூரிக்கும் உதடு மற்றும்
ஓரிதழ் பொல்லார் நெஞ்சம்
வாரித் தரச்சி வந்த
உள்ளங்கை யாம்மற் றொன்று

என்பது மனித மணம் கமழும் இயற்கை ஓவியம்.

இயற்கையோடு மனித உறவைப் பின்னிப் பார்க்கும் கலையுணர்வு பாரதிதாசனிடம் காணப்படுகிறதாயினும் இயற்கையினும் மனிதன் மேம்பட்டவன் என்று கவிஞர் கருதியிருந்ததாகவும் தோன்றுகிறது. ஒரு கவிதையில் மனிதனுக்கும் இயற்கை உயிர்களுக்கும் உள்ள ஒற்றுமைகளைச் சொல்லிய பின், மனிதன் அதனினும் மேலானவன் என்று பேசுகின்றார்.

"மனிதன் உண்போன் ; மற்றவும் உண்பன
மற்றவை உறங்கும் ; மனிதனும் உறங்குவான்
இன்புறும் பிற உயிர் ; இவனும் ஆங்ஙனே
துன்புறுவான் அவன் ; துன்புறும் பிறவும்"

என ஒற்றுமைகளை வகுத்துரைத்துவிட்டு, மற்ற உயிர்களிலும் மனிதன் சிறந்தவனாவது எப்படி என்று விளக்குகின்றார்.

முளைத்த விலங்கு முதல் சுள்ளான் வரை
உள்ள உயிர்கட்கு இல்லாத தென்ன?
உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல்
என்பது மனிதன் இடத்தில்தான் உண்டு

எனத் தீர்ப்புரைப்பார் பாரதிதாசன். இதில் கருத்து வேறுபாடு கொள்ளக் காரணமில்லை.

ஆயினும் இயற்கையை மனிதரிலிருந்து தனியே வேறுபடுத்தி விலகி நின்று காணும் இயல்பு பாரதிதாசனிடம் இருந்தது என்பதை அவருடைய கவிதைகளை முழுதுணர்ந்து கற்றோர் கண்டு கொள்ள முடியும்.

இந்த உணர்வு காரணமாகவே 'புரட்சிக் கவி' கொலைக் களத்தில் உரையாற்றும் போது இயற்கையை வெல்லும் ஆற்றலை உடையவன் மனிதன் என்று பேசுகின்றான்.

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்!

என்ற வினாவை எழுப்புகிறான்.

'தொழிலாளர் விண்ணப்பம்' என்ற கவிதையிலும் 'மலையைப் பிளந்து, கடல் ஆழத்தைத் தூர்த்து, பாதாளம் சென்று பசும்பொன் எடுத்து' உலகை உருவாக்கியதாகத் தொழிலாளர் பேசுகின்றனர்.

வாழ்வுக் கொவ்வாத - இந்த
வையத்தை இந்நிலை எய்தப் புரிந்தோம்
ஆழ்கடல் காடு - மலை
அத்தனையில் பல சத்தை எடுத்தோம்

என்பார் கவிஞர். எனவே இயற்கையைக் கடந்து செல்லும் மானுடனின் தோளின் மகத்துவம் அவருடைய கவிதையின் சாரமாகிறது.

இயற்கையின் காப்பும் அழிப்பும்

ஷெல்லியின் மேல் காற்று (Ode to the west wind) என்ற கவிதையை ஆராய்ந்த எம். எச். ஆப்ராம்ஸ் கூறுவதாவது:

> "மேலைக் காற்றுக்கு ஒரு கீதம் என்ற கவிதை காற்றின்அழித்தலும் காத்தலுமாகிய (Destroying and Preserving) இயல்பைச் சுற்றிப் பின்னபப்பட்டுள்ளது. இறப்பும் உயிர்ப்பும் என்ற தொன்ம வட்டம் அதில் காட்சி தருகிறது".
>
> (The Mirror and the Lamp, 1976)

கடலின் அடியாழத்தில் உள்ள செடிகளும் முகம் வெளுக்க ஆற்றலோடு வீசும் காற்றுத் தான் விதைகளை மண்ணுக்கு அடியில் தள்ளி இன்னொரு காலத்தில் முளைக்கச் செய்கிறது என்பார் ஷெல்லி. அழிப்பதும் வளர்ப்பதும் அதன் இயல்பு.

இயற்கையின் இந்தத் தன்மையை ஷெல்லி தாசனாகிய பாரதி நன்கு உணர்ந்தவர். அதனால் 'காற்று' என்ற புதுக் கவிதையில் இரு கயிறுகளின் கதையைக் கூறுகின்றார். பந்தலில் தொங்கும் நீளமான கயிறு கந்தன் ; குட்டையான கயிறு வள்ளி. காற்றில் அசைந்திருந்தன. அவை இரண்டும் உல்லாசமாக இருந்தன. சற்று நேரம் கழித்துப் பார்த்த போது அவை செயலற்றிருந்தன. வியப்புற்ற தருணத்தில் காற்றுத் தேவன்

தோன்றிக் கூறுகிறான் :

மகனே ஏதடா கேட்டாய்
அந்தச் சிறிய கயிறு உறங்குகிறதா
என்று கேட்கிறாயா?
இல்லை அது செத்துப் போய்விட்டது.
நான் பிராண சக்தி...
என்னாலே தான்
அச்சிறு கயிறு உயிர்த்திருந்தது
சிறிது களைப் பெய்திய உடனே
அதை – உறங்க, இறக்க விட்டுவிட்டேன்
மாலையில் வந்து ஊதுவேன்
அது மறுபடி பிழைத்துவிடும்.

இந்த அழிப்பும் உயிர்ப்பும் குறித்துப் பாரதி பல இடங்களில் பேசியுள்ளார்.

காற்றே யுக முடிவு செய்கிறான்
காற்றே காக்கிறான்.

என்று கூறுவார்.

இந்த அழிப்பும் துளிர்ப்புமாகிய இயற்கையின் தன்மையைக் காற்றின் மூலமாகவே பாரதிதாசனும் கூறுகின்றார். அழகின் சிரிப்பில் காற்றின் ஆற்றலை நுட்பமாக இழைத்தெடுத்துப் பேசுகின்றார்(தென்றல்):

"திண்குன்றைத் தூள்தூ ளாகச்
செய்யினும் செய்வாய், நீ ஓர்
நுண் துளி அனிச்சம் பூவும்
நோகாமல் நுழைந்தும் செல்வாய்"

இயற்கையின் அழிக்கும் ஆற்றலைப் புயல்களாகவும், பூகம்பங்களாகவும் எரிமலைகளாகவும் பார்க்கிறோம். பாரதியைப் போன்ற ஆன்மிகக் கவிகள் அதைத் தெய்வக் கூத்து

என்று சொல்லி அமைதி காண முடியும். பாரதிதாசனைப் போன்ற இறை மறுப்பாளர்கள் என்ன கூறுவார்கள்?

'குவெட்டாவில் பூகம்பம்' என்ற கவிதையில் பாரதிதாசன் ஒரு தீர்வை உரைக்கின்றார். பானை வெடிக்கையில் பருக்கை தப்ப முடியுமா என்று வினவும் பாரதிதாசன் அழிவின் கோரத்தைப் படம் பிடிக்கிறார்.

மாடம் இடிந்தனவாம் - அவை
மண்ணில் புதைந்தனவாம்
ஆடும் தரை யோடும் மெத்தை
அடுக்கொடிந்தனவாம்
கூடத்து மக்களெல்லாம் - எழிற்
கொஞ்சும் பழம் போலே
வாட நசுங்கினராம் - ரத்த
வாடை எடுத்ததுவாம்

இயற்கையின் கொடுஞ் சீற்றத்தை எப்படி எதிர் கொள்வது? மரணம் தவிர்க்க முடியாதது என்று எண்ணி எண்ணி மனதை உறுதிப்படுத்துவது தவிர வேறு வழியில்லை.

சாவது நிச்சயமாம் - நான்
சாவது நிச்சயமாம்...
கூவு தம்பி கூவு - இந்தக் குவலயம் கேட்க
கூவுக லட்ச முறை - உன்
கொச்சை மனம் தெளியும்

இயற்கை சினந்தால் போக்கிடம் இல்லை. இதனை மன உறுதியாலன்றி எதிர்கொள்ள இயலாது எனத் தெளிவுபடுத்துகிறார்.

இயற்கையில் குறியீடு

குறியீடு உய்த்துணர வைக்கும் ஓர் உத்தி. சங்கத் தமிழ் அகக் கவிதைகள் உள்ளுறை, இறைச்சி என்ற குறிப்புப் பொருளை மிக ஆழமாய்த் தாங்கி நிற்கின்றன. வகைப்படுத்தலுக்கு வேண்டுமானால் மேலைத் திறனாய்வுகள் நமக்கு உதவலாமேயன்றி, குறியீட்டுக் கவிதை பற்றிக் கற்றுக் கொடுக்க அவை தேவையில்லை.

மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை கூடத் தம் நாடகத்தை சைவசிந்தாந்த தத்துவக் குறியீடாக்கிக் காட்டுவார்.

இக்கவிதையினை ரூபகமாலாலங்காரமாகக் கருதில்
தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுக்களுக்கு
அனுகூலமாகப் பலிக்கவும் கூடும்.

பின்னர் ஒவ்வொரு பாத்திரமும் என்ன தத்துவம் என்று தாமே விளக்குவார்.

இந்த வழியில் பாரதி பாஞ்சாலி சபதத்தைப் படைத்திருந்தாலும் இயற்கையைக் குறியீடாக்க முனைந்தாரா என்று பார்த்தால் நம் கண் முன் குயில் சிறகு விரிக்கிறது.

வேதாந்த மாக்கி விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தால் கூறீரோ

என்று பாரதியே இதனை வாசகனுக்கு நினைவூட்டுவார். குயிலின் குறிப்புப் பொருளை விளக்க முயன்ற அறிஞர்கள் பற்பலர் என்பதை இலக்கியச் சுவைஞர்கள் அறிவர்.

தனிக் கவிதைகளிலும் இம் முயற்சியைப் பாரதி மேற்கொண்டிருப்பதற்கு அவருடைய 'அக்கினிக்குஞ்சு' மிகச் சிறந்த அடையாளம்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு – தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

இக் கவிதையில் வரும் அக்கினிக்குஞ்சு விடுதலை வேட்கை என்றும் , காடு ஆங்கில ஆட்சி என்றும் சி. கனகசபாபதி கருதுவார். சி.சு. செல்லப்பா அக்கினியை ஞானம் என்றும், பொந்தை மனம் என்றும் , காடு அஞ்ஞானம் என்றும் விளக்குவார்.என்றாலும் பெண்விடுதலையே அக்கினிக் குஞ்சு என்று சிற்பி விளக்கியுள்ளார்

(பார்க்க -சிற்பி, மகாகவி ப. 28)

வேறு இயற்கைக் குறியீடுகளையும் பாரதி தமிழில் காணலாகும்.

பாரதிதாசனைப் பொறுத்தவரை அவர் வளர்த்தெடுத்த கவிதை மரபு சங்க இலக்கியம் சார்ந்ததெனப் பேராசிரியர் கா.செல்லப்பன் கூறுகின்றார். எனினும் சங்கக் கவிதையின் ஆன்மா என்று கூறத்தக்கது அதன் குறிப்புப் பொருள்களான உள்ளுறையும் இறைச்சியுமே. இக் குறிப்புப் பொருளை விடவும் வெட்டெனப் பேசுவது தான் பாரதிதாசனின் கவிதை உத்தியாகும்.

பாண்டியன் பரிசில் வரும் பேழை தமிழ்ப் பண்பாட்டுக் குறியீடு என்று கருத இடமிருப்பதாக, சி.கனகசபாபதி கருதியுள்ளார் (பாரதியும் பாரதிதாசனும், ப. 172). கா.செல்லப்பன் சஞ்சீவி பருவதத்தின் சாரலில் வரும் அதிசய மூலிகைகள் இரண்டும் பகுத்தறிவின் குறியீடு என்பார்.

(Imagery, symbol & myth in a few poems of BharathiDasan, Bharathidasan critical perspectives, MKU. 1991)

சி.கனகசபாபதி தம் ஆய்வு நூலில் சஞ்சீவி மூலிகைகளை நடப்பியலுக்கும் (Herbs of Realism) வஞ்சியைப் பகுத்தறிவுக்கும், சஞ்சீவி மலையை வீண் தடைக்கும் (Mountain of Futility) எனத் தொடர் உருவகங்களாகக் கருதுவார்.

கவிதைகளை விளக்குவது திறனாய்வாளர்களின் உரிமை. எனினும் இராமாயணக் கதையில் மூலிகை மலையை அனுமன் தூக்குவதை மூட நம்பிக்கை என்று சொல்ல வரும் கவிஞர் தொலைக்காட்சி போல் பார்க்கவும், வானொலி போல் கேட்கவும் மூலிகைகள் இருப்பதாகச் சொல்வது கதையின் அடிப்படைப் பலவீனம் என்றே கருத முடியும். அதனால் தான் பேராசிரியர் கே. சுவாமிநாதன்,

> ***"சஞ்சீவி மலையைத் தூக்கும் சக்தியை ஹனுமாருக்கு வால்மீகி அளித்தது சுத்த மோசமான பொய்மை, மனிதரை ஏமாற்றும் அயோக்கியத் தனம் என்ற பகுத்தறிவுக் கக்ஷியை ஸ்தாபிக்கும் காவியத்திலே குப்பனுக்கும் வஞ்சிக்கும் ஞானோதயம் சித்திக்கும் பொருட்டு பாரதிதாஸன் தான் மட்டும் சில மூலிகைகளுக்கு இன்னும் அபூர்வமான சக்திகளை அளித்திருப்பது எந்த அதிகாரத்தின் கீழ்? எந்த நியாயத்தின் மேல்? இன்மையில் உண்மையுண்டோ என்று ஒரு கவி- வேடிக்கையாயன்றிக் கேட்பதுண்டோ?"***

(ஹனுமான் ஆண்டு மலர் 1938 , மணிகண்டன், பாரதிதாசன் இலக்கியங்கள் , பொன்னி , சென்னை 91, 2005, ப. 232)

இவ்வாறு கருத்துரைத்துள்ள பேராசிரியர் கே.சுவாமிநாதன் பாரதிதாசனின் மதிப்பையும் மாண்பையும் அறிந்தவர்.

> ***"தமிழ் நாட்டில் இன்று உயிருடன் இருக்கும் கவிகளுள் உண்மைக் கவி யார்? உயிர்க்கவி யார்? சிரஞ்சீவிக் கவி யார்? என்று கேள்விகள் கிளம்பினால் சற்றும் சந்தேகமின்றிப் பாரதிதாஸன் என்ற ஒரு விடைதான் நம்மால் கொடுக்க முடியும்"***

என்று 1938இல் – பாரதிதாசனின் சில நூல்களே வெளிவந்திருந்த காலத்தில் அவரை மதிப்பிட்டவர் பேராசிரியர் என்பதையும் மறக்கலாகாது.

எனினும் தேர்ந்த வாசகர்கள் இயற்கைக் குறியீட்டுக் கவிதை பாரதிதாசனிடம் பெறும் இடத்தைச் சிந்தித்து தெளிவு செய்து கொள்ளலாம்.

இயற்கையில் தெய்வீகம்

இயற்கையை இறைமையாகக் காண்பது ஒரு கவிப் பார்வை. இதனை (Spiritualisation of Nature) இயற்கையைத் தெய்வீகப் படுத்துதல் என்று கூறலாம்.

பாரதி இயற்கைப் பொருள்களைத் தெய்வமாகக் காணும் இயல்புடையவர். அன்னைக்கு வழிபாடு (Matripuja) என்ற ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் பாரதி கூறுகின்றார்.

" In the light of the sun, in the music of the winds, in the soft rays of the stars and the rage of a storm, in the loves and hates, fears and hopes, dreams and deeds of men and women, in the subtlety of thought and the majesty of the volcano, in these and in all the things we behold the mother of our worship"

"கதிரொளியில், காற்றின் இசையில், விண்மீனின் மெல்லிய கிரணத்தில் , புயலின் கொந்தளிப்பில், விருப்பில், வெறுப்பில், அச்சத்தில், நம்பிக்கையில், ஆடவர் பெண்டிர் கனவில், செயலில், சிந்தனை நுண்மையில், எரிமலையின் கம்பீரத்தில் எங்கும் நாம் வழிபடும் தாயைக் காண்கிறோம்"

- இது பாரதியின் கருத்து.

இயற்கையைப் பாடவும் வாழ்க்கையைப் பாடவும் எழுதுகோலை எடுக்கும் போது, 'பராசக்தி, என்னைப் பாடு' என்கிறாள் என்பதாய்ப் பாரதி கவிதை செய்கிறார்.

மழைபொ ழிந்திடும் வண்ணத்தைக் கண்டுநான்
வானி ருண்டு கரும்புயல் கூடியே
இழையும் மின்னல் சரேலென்று பாயவும்
ஈர வாடை இரைந்தொலி செய்யவும்
உழையெ லாம்இடை யின்றிஇவ் வானநீர்
ஊற்றும் செய்தி உரைத்திட வேண்டுங்கால்
மழையும் காற்றும் பராசக்தி செய்கைகாண்
வாழ்கதாய், என்று பாடுமென் வாணியே

ஞாயிற்றைப் பாடும் போதும் 'வேதம் பாடிய சோதி' என்பார். காணி நிலம் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் போதும் 'பராசக்தி நின் காவலுற வேண்டும்' என்பார். 'மகாசக்தி வாழ்த்து' என்ற கவிதையில் அனைத்தியற்கையும் காளியே என்பார்:

விண்டு ரைக்க அறிய அரியதாய்
விரிந்த வான வெளியென நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை
மண்ட லத்தை அணுஅணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
கோல மேநினைக் காளி என்றேத்துவேன்

'திக்குகள் எட்டும் சிதறி' என்ற பெருமழைக் காட்சியைப் பாடி மகிழும் பாடலில் 'தெய்வீகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம்' என்று முடிப்பார்.

சக்தி என்ற புதுக் கவிதை வரிசையில் இயற்கைப் பொருள்களையும் செயல்களையும் அனைத்தையும் சக்தியின் விளையாட்டாகப் புனைந்துரைப்பார்.

சக்தி முதற் பொருள்
பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு
சக்திக் கடலிலே ஞாயிறு ஓர் நுரை
சக்தி வீணையிலே ஞாயிறு ஒரு வீடு
ஒரு ஸ்வரஸ்தானம்
சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம்
சக்திக் கலைகளிலே ஒளி ஒன்று
சக்தி வாழ்க"

என்பது பாரதி தமிழ். காக்கைச் சிறகிலும், பார்க்கும் மரத்திலும் கண்ணனைத் தரிசிப்பது பாரதி தமிழ்.

ஆனால் பாரதிதாசன் இறை மறுப்பாளர். அது மட்டுமன்றி இயற்கைக் காட்சியை முருகன், வேலன், என்று முன்னோர் கூறினார்கள் (திரு.வி.க. கருத்து) என்பதைக் கூடத் தன் கவிதையில் ஏளனம் புரிந்தவர்.

குன்றின் மீது நின்று கண்டேன்
கோலம் என்ன கோலமே
பொன் ததும்பும் அந்தி வானம்
போதம் தந்ததேடி தோழி
முன்பு கண்ட காட்சி தன்னை
முருகன் என்றும் வேலன் என்றும்
கொன் பயின்றார் சொல்வார் அஃது
குறுகும் கொள்கை அன்றோ தோழி"

என்று கடிந்து கொள்வார்.

'தெய்வீகத்தை நம்பும் திருந்தாத' மக்களைக் குறித்துத் தாலாட்டுப் பாட்டிலும் கேலி செய்வார். மற்றொரு பாடலில்,

கடவுளாணை என்று சொல்லும்
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்

என்று சினந்து சீறியவர் பாரதிதாசன்.

சேசு முகம்மது என்றும் – மற்றும்
சிவனென்றும் அரியென்றும் சித்தார்த்தனென்றும்
பேசி வளர்க்கின்ற போரில் – உன்
பெயரையும் கூட்டுவர் நீ ஒப்ப வேண்டாம்

என்று அழுத்தமாய்ச் சொல்லியவர். கடவுள் பெயரால் பதிகங்கள், அவதாரங்கள், லோக குருக்கள், தம்பிரான்கள், ஜீயர், தூதர் எல்லாம் பம்மாத்துக்கள் என்பது அவருடைய தெளிந்த முடிவு.

எனவே இயற்கையில் இறைமை காண்பது உண்மையிலேயே பாரதிதாசனுக்கு ஒவ்வாமை உடையது. அவ்வாறாயின் தெய்வத்துக்குப் பதிலாக இயற்கையில் எதனை அவர் காண விழைந்தார் எனக் கேட்டால் அதற்குரிய விடை 'தமிழ்' என்பது தான்.

'பார்க்கும் இடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தம்' பாரதிதாசனுக்குத் தமிழ் மொழி தான்.

இயற்கையைப் பாட நினைக்கும்போது பராசக்தி தன் கவிதையில் பங்கு கேட்கிறாள் என்று பாரதி எழுதியதை முன்னர் பார்த்தோம். அதே போன்ற ஒரு கவிதையைப் பாரதிதாசனும் எழுதியுள்ளார். (இவ்வாறு பல பின்பற்றுதல்களைப் பாரதிதாசன் கவிதையில் காணலாம்). 'ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட' என்ற பாடல் அது. கவியெழுத எழுது கோல் ஏந்தியவுடன் இயற்கை வரிசை வரிசையாகப் படையெடுத்து வந்ததாம்.

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் – தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடு மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

என வரிசையாய் அணிவகுத்த இயற்கை அழகுகளைச் சொல்லுவார்.

தென்றல், மயில், அன்னம், மாலைச் சூரியன் என வருகின்றவற்றை எல்லாம் பார்த்துவிட்டுக் கவிஞர் கூறுவார்:

இன்னலிலே தமிழ் நாட்டினி லேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண் டாக்கி என்
ஆவியில் வந்து கலந்ததுவே

இயற்கை காத்திருக்கட்டும். என் தமிழர் துயர் தீர்ந்து 'இன்பத் தமிழ்க் கல்வி' பெறட்டும் என்று எண்ணுகிறார் கவிஞர்.

பாரதிக்குப் பராசக்தியும் கடவுளரும் . பாரதிதாசனுக்குத் தமிழும் தமிழரும்.

எனவே தெய்வீகத்துக்கு மாற்றாக இயற்கையில் தமிழைக் காண்கிறது பாரதிதாசன் உள்ளம். இனிமை தரும் இயற்கைப் பொருள் அனைத்தும் தமிழை நினைவூட்டுகின்றன.

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்

பாரதிதாசனின் தமிழுணர்வுக் கவிதைகளில் எல்லாம் இயற்கை இன்பங்களுக்கு நிகராகவும் மேலாகவும் தமிழ் இடம்பெறுகிறது.

வெண்ணிலாவும் வானும் போல

வண்ணப்பூவும் மணமும் போல

கண்ணும் ஒளியும் போல

கன்னல் தமிழும் நானும் என்பார். 'தமிழே நீ ஒரு பூக்காடு ; நான் ஓர் தும்பி' என்று மெய்சிலிர்ப்பார்.

இயற்கையையும் தமிழையும் அவர் இரட்டைப் பிறவிகளாகக் கருதினார் என்பதை இயற்கை நந்தவனமான அழகின் சிரிப்பு நூலில் தமிழையும் அழகுற நட்டு வளர்த்திருப்பதிலிருந்தே அறியலாம்.

பழந்தமிழ் மக்கள் அந்நாள்
பறவைகள் விலங்கு வண்டு
தழைமூங்கில் இசைத்த தைத்தாம்
தழுவியே இசைத்த தாலே
எழும்இன்பத் தமிழே! இன்பம்
எய்தியே குதித்த தாலே
விழியுண்ணப் பிறந்த கூத்துத்
தமிழே! என் வியப்பின் வைப்பே

என்று முத்தமிழும் இயற்கையின் மடியில் பிறந்ததாகப் பேசுவார். 'பன்னூறு நூற்றாண்டாகப் பழந்தமிழ் மலையின் ஊற்றாய்'ப் பிறந்த தமிழை இயற்கையுடன் இணைத்துக் கொஞ்சிக் குதூகலிப்பது பாரதிதாசன் மாண்பு.

எனவே பாரதி இயற்கையில் தெய்வீகத்தைத் தரிசித்த போது பாரதிதாசன் தெள்ளு தமிழைக் கண்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

இயற்கை வழி பிரபஞ்ச உணர்வு
பிரபஞ்ச உணர்வில் பூத்த தத்துவம்

Cosmic Consciousness என்ற ஆங்கிலச் சொல்லே பிரபஞ்ச உணர்வு என இங்கு குறிப்பிடப்படுகிறது.

கார்ல் ஷேப்பிரோ (Karl Shapiro) என்ற அமெரிக்கக் கவிஞர் திறனாய்வாளர் இச்சொல்லைக் கையாளுவதுடன் அதைக் குறித்த விளக்கத்தையும் நல்கியுள்ளார்.

"In cosmic consciousness there is a sense of of identi-

fication with the universe, an inteclletual enlightenment or illumination which may last only briefly but which places the individual on a new plane of existence

According to (Richard. M.) Bucke(author of Cosmic consciousness) and other commentators, the man of cosmic consciousness is in effect a member of a new species of the race. He is characterised by a state of moral exaltation, enhanced intellectual powers, a feeling of elevation, elation and joyousness and a conviction of immortality (Karl Shapiro, In defense of Ignorance, 1960)".

பிரபஞ்ச உணர்வு என்பது பிரபஞ்சத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் உணர்வு. அறிவார்ந்த தெளிவு அல்லது ஒளி. குறுகிய கால அளவில் அது வெளிப்பட்டாலும் அது ஒருவனைப் புதிய தளத்துக்கு இட்டுச் செல்லக் கூடியது.

"பிரபஞ்ச உணர்வு என்ற நூலின் ஆசிரியர் ரிச்சர்டு எம். பக் என்பாரும் பிற அறிஞர்களும், பிரபஞ்ச உணர்வு படைத்தவன் மனித குலத்தில் புதிய இனமானவன் என்பர். அற உணர்வுக் களிப்பும் அறிவாற்றல் திளைப்பும், உன்னத மன நிலையும், உவகையும், மகிழ்வும் அமரத் தன்மையில் உறுதியும் பூண்டவனாக அவன் இருப்பான்".

இந்தக் கண்ணோட்டம் உடைய பிரபஞ்ச கவிகளாக வேர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ் ஆகியோரைக் கருதலாம்.

கண்ணுக்குத் தெரியாத பண் எனும் சிறகுயர்த்தி இயற்கைக்குள் பறந்து போகக் கருதிய கீட்ஸ்,

"I live not in myself but I become
Portion of that around me"

(நான் என்னில் இல்லை, என்னைச் சுற்றிலும் உள்ளதன் பகுதியாகிறேன்)

என்று உணர்ந்த பைரன்,

சல்லித் துளிப் பூவும் எனக்குள்
கண்ணீர்ச் சாகரம் பொங்க வைக்கும்

என்று கலங்கிய வேர்ட்ஸ் வொர்த்,

நான் பூமிக்கும் கடலுக்கும் மகளாவேன்
வானம் எனக்குச் செவிலித்தாய்...
நான் மாறுவதுண்டு மரண முறுவதில்லை

என்று தன்னையே மேகமாக்கிக் கொள்ளும் ஷெல்லி ஆகிய கவிஞர்கள் எல்லாம் பிரபஞ்ச உணர்வின் பிள்ளைகள்.

இந்தப் பிரபஞ்ச உணர்வு பாரதிக்கு வாய்த்ததில் வியப்பில்லை. ஏனெனில் 'நீ அதுவாகிறாய்' (தத்துவமசி) என்ற அத்வைத வாசகத்தில், தத்துவத்தில் ஆழ்ந்து போனவர் அவர். அதனால் சூழும் இயற்கைப் பொருள்கள் அனைத்துள்ளும் வாழும் வரம் அவருக்கு வாய்த்து விடுகிறது.

உன்னத வெளிப்பாடான அவர் கவிதை இயற்கையில் ஒன்று கலந்து போன களியாட்டமாய் வெறி கொள்கிறது!

காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

இது ஒரு பரவச நிலை. எல்லையற்ற பிரபஞ்சத்தோடும் உயிர்களோடும் நெருங்கிய ஆன்ம உறவின் லயிப்பில் ஏற்படும் திளைப்பு. அவர் சொல்லுவார்:

வானிற் பறக்கின்ற புள்ளெலாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்
கானில் வளரும் மரமெலாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்

இந்த எக்களிப்பின் விளைவாக அச்சமில்லை, அமுங்குதல் இல்லை, பகை இல்லை, போட்டி இல்லை, பொறாமை இல்லை...

உள்ளதெலா மோர் உயிரென்று கண்டபின்
உள்ளம் குலைவதுண்டோ

என்ற மன நிலை வந்தெய்துகிறது. அதனால் 'தின்ன வரும் புலி தன்னையும்' அன்பொடு சிந்தையில் போற்றிடும் வியப்பு நிகழ்கிறது. இதன் விளைவாகப் பாரதி தன் புதுக் கவிதையில் எழுதுகிறார் :

இவ்வுலகம் ஒன்று
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு- இவை யனைத்தும் ஒன்றே
ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலை, அருவி,
குழல், கோமேதகம் – இவ்வனைத்தும் ஒன்றே
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணான், குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெலாம் ஒன்று
மூடன், புலவன்,
இரும்பு,வெட்டுக்கிளி
இவை ஒருபொருள்

இந்த மனநிலை பாரதி கண்ட தத்துவமன்று - பாரதம் கண்ட தத்துவம். அத்வைதம் என்ற தத்துவம். இதில் பாரதி செய்து கொண்ட சீர்திருத்தம் ஒன்று உண்டு.

நானே பிரம்மம் என்ற அச்சில் அத்வைதம் சுழல்கிறது. ஆயினும் உலகும் உயிர்களும் அவன் தோற்றத்தின் நிழல்கள் - அதாவது பொய்த் தோற்றம் - மாயை என்று அத்வைதம் கூறும்.

அதைப் பாரதி ஏற்கவில்லை. அதனால் தான் 'மாயையைப் பழித்தல்' என்ற கவிதையில்,

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே
நீங்களெல்லாம்
சொப்பனந் தானோ பல தோற்ற
மயக்கங்களோ

என்ற கேள்வியை எழுப்பி, இல்லை, இல்லை என்று மறுதலிக்கிறார்.

காண்பது சத்தியமாம் - இந்தக்
காட்சி நித்தியமாம்

என்று உறுதியாகக் கூறி, மண்ணுலகையே வானுலகாக்கி வாழ முடியும் என நிறுவுகிறார்.

இங்கே அமரர் சங்கம் தோன்றும்

என்ற மரணம் கடக்கும் வாழ்வியல் தத்துவம் பிரபஞ்ச உணர்விலிருந்து பாரதிக்குச் சித்திக்கிறது.

மாயை கடந்த அத்வைத தத்துவமும் பார்வையும் இயற்கையோடியைந்த அமரத்துவமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கொள்கின்றன பாரதி தமிழில்.

பாரதிதாசனைப் பொறுத்தவரை சமய தத்துவங்கள் என்ற கண்ணாடியின் வழியே இயற்கையை அவர் காணவில்லை. ஆயினும் மனிதம் என்ற அடித்தளத்திலிருந்து ஒரு பிரபஞ்ச நோக்கு அவரிடம் பிறப்பெடுத்திருக்கிறது.

கடவுட் கொள்கையை ஏற்க மறுக்கும் கவியுள்ளம் மனித உலகைச் சுற்றிச் சுற்றி வருகிறது. மானுட உழைப்பின் மகத்துவத்தில் லயிக்கிறது. காதலில் முத்துக் குளிக்கிறது. மூடப் பழக்க வழக்கங்களை முழு மூச்சாய் எதிர்க்கிறது. சாதிகளை, சமயங்களைக் கொலை வாள் கொண்டு சாய்க்கத் துடிக்கிறது. அப்பாலைத் தத்துவங்கள் இத்தகைய நெஞ்சில் இடம் பெறுவது அரிதாகிவிடுகிறது.

உலகம் ஒன்று, மனிதகுலம் ஒன்று என்று பாரதிதாசனின் கவிதையில் உள்ள இரத்த நாளங்கள் விம்முகின்றன . கவிஞர் ஏறுபோல் நிமிர்ந்து நின்று கூனிக் கிடக்கும் மனிதனைக் கூவிச் சொல்கிறார்:

ஏறு, வானை இடிக்கும் மலைமேல்
ஏறு விடாமல் ஏறு மேன்மேல்
ஏறி நின்று பாரடா எங்கும்...
எங்கும் பாரடா இப்புவி மக்களை"
பாரடா உனது மானிடப் பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம் ...

அறிவை விரிவு செய் அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு

மனித குலத்தை - மொழி, இன, நிற, நாடு என்ற பிரிவுகளுக்கு அப்பால் சென்று தழுவிக் கொள்ளும் மானிடத் தத்துவம் பாரதிதாசனுடையது.

இன்னும் மேலே இன்னும் உயரே, இன்னும் ஆழ்ந்து 'தொல்லுலக மக்களெலாம் ஒன்று' என்ற எல்லையைக் கடந்து 'விண்ணோடும் முகிலோடும்' பிறந்த உணர்வை இறுகப் பற்றி உயிர்க் குலத்தை, பிரபஞ்சத்தை ஒன்றாகக் காணும் ஒரு தத்துவம் பாரதிதாசனிடம் இல்லையா?

இதற்கு விடை காண மீண்டும் 'அழகின் சிரிப்பை' நோக்கித்

திரும்புகிறோம். பாரதிதாசன் கவிதைகள் பாகம்2 இல்,

விரிந்த வானே, வெளியே - எங்கும்
விளைந்த பொருளின் முதலே

என இயற்கையை முன்னரும் வியந்தவர்தான். ஆனால் இயற்கையின் கொடைகள் புதுமை, புதுமை என்று அடையாளப்படுத்துவதோடு நின்று விடுகிறார். ஆகவே 'அழகின் சிரிப்பு' நூலைச் சரணடைகிறோம்

1944இல் வெளிவந்த நூல் அழகின் சிரிப்பு. இந்த நூலின் தோற்றத்துக்கு ஒரு பின்னணியுண்டு.

'சக்தி', இதழுக்காகப் பாரதிதாசனைப் பேட்டி கண்டு 'வாத்தியார் வீடு' என்ற தலைப்பில் வெளியிட்டவர் குமரி மலர் ஏ.கே. செட்டியார். இப்பெரும • னார் பாரதிதாசனிடம் "பல அருமையான படைப்புகளைத் தந்திருக்கிறீர்கள், ஆனால் ஆங்கிலக் கவிஞர்களைப் போல இயற்கைப் பொருள்களைத் குறித்துப் பாடினால் உங்கள் புகழ் இன்னும் விரியுமே" என்று கூறினார். "அப்படி எழுதினால் யார் வெளியிடுவார்கள்?" என்று கவிஞர் கேட்டார். அதற்கு ஏ.கே. செட்டியார், "நான் புதிதாக இதழ் தொடங்குகிறேன் - 'குமரி மலர்' அதில் வெளியிடுகிறேன்" என்றார்.

1943 ஏப்ரலில் வெளிவந்த அதன் முதல் இதழில் 'சிற்றூர்' என்ற கவிதையை எழுதினார் பாரதிதாசன். அதில் ஒரு அறுசீர் விருத்தத்தில் ஐந்து அடிகள் வெளிவந்துள்ளன. நண்பர்கள் கேட்ட போது, "கவிஞரின் கவிதை ஓட்டத்தில் நான் குறுக்கிட விரும்பவில்லை" என்று ஏ.கே. செட்டியார் தெரிவித்தாராம்.

(நேர்முகமாக அறிந்தவர் புதுக்கோட்டை ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி)

'அழகின் சிரிப்பு' நூலாக 1944இல் வெளிவந்தமைக்கு - ஒரு மகா கவி இயற்கை ஓவியங்களை வரைந்து தருவதற்குக் காரணமாக இருந்தமைக்கு ஏ.கே. செட்டியார்பால் தமிழ் இலக்கிய உலகம் கடமைப்பட்டிருக்கிறது.

அழகின் சிரிப்பில் முதல் கவிதையான அழகு சக்தி இதழில் வெளிவந்தது. 'காலை இளம் பரிதியிலே' எனத் தொடங்கும் மகத்தான கவிதை அது. மூன்று எண்சீர் விருத்தங்களால் ஆனது. முதல் பாடல் வருமாறு:

காலை இளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற் பரப்பின் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டம்
தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்

சிறுகுழந்தை விழியில், திருவிளக்கில், மலர் தொடுக்கும் விரலில், உழவன் தோளில், நன்செய் வயலில், அழகு குடியிருந்தது என இரண்டாம் பாடலில் கூறினார்.

மூன்றாவது பாடலில் பிரபஞ்ச உணர்வின் விளிம்பினைத் தொடுகிறார் பாரதிதாசன். வையத்தையும், வானத்தையும், திசைகளையும் அளாவி வருகிறது கவிமனம். உயிரினங்களினூடே உலா வருகிறது கவிதை நெஞ்சம்.

கவிஞரின் உணர்வியக்கமான வரிகள் தொடர்கின்றன.

திசை கண்டேன்
வான் கண்டேன்
உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும்
கண்டேன் ; யாண்டும்
அசைவனவும் நின்றனவும்
கண்டேன்

அனைத்துத் திசைகளையும், உலகையும் , சராசரங்களையும் கண்டபோது கவிஞருக்குள் ஒரு எழிலுருவம் புலனாகிறது.

அழகு தனைக் கண்டேன்
நல்லின்பம் கண்டேன்

அழகு இன்பமாய்ப் பரிணமிக்கிறது. அந்தப் பரிணாமத்தில் ஒரு தத்துவம் உருப்பெறுகிறது.

பசையுள்ள பொருளில் எல்லாம்
பசை அவள் காண்
பழமையினால் சாகாத
இளையவள் காண்...

என்று நமக்கு அறிவிக்கிறார் பாரதிதாசன்.

அனைத்து இயற்கையிலும் இரத்தமாய், சாறாய், சாரமாய் ஒன்றைக் கண்கிறார். அழிவற்ற ஒன்றைக் கண்கிறார். அது தான் அழகு என்ற தத்துவம்.

எங்கும் பிரமம் என்ற அத்வைதம் போல் - இது எங்கும் பரவியிருக்கும் அழகுத் தத்துவம். தேடினால் காண முடியும்.

நசையோடு நோக்கடா
எங்கும் உள்ளாள்

இந்த அழகு உன் கண்களுக்குத் தட்டுப்பட்டு உ 'யிருக்குள் கலந்து உள்ளத்தில் ஒன்றிப் போய்விட்டால் அதுவே பேரின்பம்.

நல்லழகு
வசப்பட்டால் துன்பம் இல்லை

இதுதான் - இந்த அழியா அழகுதான் ஒரு மனிதத்துவக் கவிஞனின் தத்துவமாக இருக்க முடியும்.

'Truth is Beauty ; Beauty is Truth' 'உண்மையே அழகு; அழகே உண்மை ' என்று சொன்ன கீட்சின் இதய தாகத்தோடு பாரதிதாசனின் அழகு வெள்ளம் ஒன்றிக் கலந்து விடுகிறது.

பாரதியிலிருந்து தொடங்கிய கவிதைத் தொடரோட்டம் உச்சியை, உன்னதத்தைத் தொடுகிறது பாரதிதாசன் என்ற மகாகவியின் மூலமாக.

◆

5 நிறைவாக ...

பாரதியையும் பாரதிதாசனையும் ஆளுமை, கவிதை, படைப்புத்திறன் என்ற அடிப்படைகளில் ஆய்வு செய்த அறிஞர்கள் சிலரை இங்கு நினைவுகூர்கின்றேன். இவர்கள் பெரிதும் நடுநிலை நின்று கருத்துரைத்தவர்கள் எனலாம்.

பேராசிரியர் கா. செல்லப்பன், பேராசிரியர் ப.மருதநாயகம் ஆகிய இருவரும் ஆங்கில இலக்கியம் கற்றுத் துறைபோகியவர்கள். அது மட்டுமல்லாது இரு பெருங் கவிஞர்களையும் மதித்துப் போற்றும் இயல்பினர். ஆகவே இவர்களுடைய ஒப்பீடுகள் இலக்கிய நெறியை வளப்படுத்துவதாக அமைந்துள்ளன.

சிலம்பொலி செல்லப்பன், சாலை இளந்திரையன், அறிவொளி போலப் பலர் பாரதிதாசனை ஆய்வு செய்திருப்பதையும் இங்கே பதிவு செய்கிறேன்.

கா. செல்லப்பன் 'Bharati Dasan : Poet of a new brave world' என்ற ஆங்கில நூலில்,

> "Wheras in Bharati we find a visionary humanism and nationalism based on transcenderrtalism and divinity, in Bharati Dasan we find a revolutionary humanism based on Tamilism and Naturalism"

> பாரதியிடம் தெய்வீகத் தன்மையிலும், அனுபவம் கடந்த மெய்யுணர்விலும் ஊன்றிய நோக்குறு மனிதமும், தேசியமும் காணப்படுகிறதென்றால், பாரதிதாசனிடம் தமிழியத்திலும் இயற்கை நெறியிலும் ஊன்றிய புரட்சிசார் மனிதம் காணப்படுகிறது.

என்று குறிப்பிடுவது ஒரு முக்கியமான ஆய்வுக் கருத்தாகும்.

இவ்வாறே ப. மருதநாயகம் இவ்விருவரையும் ஒப்பு நோக்கி எழுதவில்லையென்றாலும் (என் பார்வைக்கு எட்டவில்லை) இருபெருங்கவிஞர்களையும் ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

அவற்றில் மிக வியப்பூட்டும் பல செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார். பாரதியைத் தமிழ் மரபின் பின்புலத்திலும், மேலை இலக்கியப் பின்புலத்திலும் நிறுத்தி அவருடைய பங்களிப்பை மதிப்பிடும்போது பிற இலக்கியத் தாக்கத்துக்கு நிகராகத் தமிழ் மரபு அவரிடம் செயல்படுவதை உணர்த்தியுள்ளார். அது போன்றே பாரதிதாசன் இராவணன், இரணியன் தொன்மங்களை மீட்டுருவாக்கம் செய்துள்ள சிறப்பையும், உயர்ந்த கோட்பாடுகளைக் கவிதைகளாக்கியுள்ள திறனையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

(பாரதி ஆறு, பாரதிதாசன் பத்து, ப. மருதநாயகம் 2004).

இவ்விரு பெருங்கவிஞர்களையும் ஒப்பீடு செய்த தமிழ்ப் பேராசிரியர்களில் தலைமை இடம் பெறத் தக்கவர் பேராசிரியர் சி. கனகசபாபதி. திறனாய்வுச் சோதனைகளில் வல்லவரான இவ்வறிஞரின், 'பாரதியும் பாரதிதாசனும் ஒப்பியல் திறனாய்வு' (1980) நவீன ஆய்வுப் போக்குக்கு ஓர் அடையாளம்.

எம்.என். சீனிவாஸ் என்னும் பொருளியல் அறிஞரின் மேல்நிலை ஆக்கம், கீழ்நிலை ஆக்கம் என்னும் கோட்பாடுகளை முன்னிறுத்தி மிக விரிவாக இந்த ஒப்பியலாய்வை அவர் நிகழ்த்தியுள்ளார்.

ஆய்வின் முடிவாக அவர் கண்டுரைப்பது :

பாரதியைப் பக்திக் கவிஞர் என்று சொன்னவர்கள் உண்டு. பாரதிதாசனைச் சாதி வெறுப்புக் கவிஞர் என்று சொன்னவர்கள் உண்டு. அவர்கள் தங்களையும் தாங்கள் குறுகிய வட்டத்தையும் நோக்கியே இப்படிச் சொன்னார்கள். அவர்கள் பார்வையை மதிப்பீடு செய்வது இந்த ஆய்வில் எனது கடமை ஆகிறது. பாரதி – பாரதிதாசன் இருவரும் சமுதாயவியல் நோக்கு மிகுந்த தற்காலக் கவிஞர்கள் என்பதுதான் இந்த ஆய்வின் மூலம் எனக்குத் தெரிந்த மதிப்பீடு.

1980 இல் பாரதி ஆய்வுகள் மேற்போக்காக இருந்த காலகட்டத்தில் சி.கனகசபாபதி இக்கருத்தைச் சொன்னார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

பாரதிதாசன் ஆய்வில் தலைமை சான்றவர் என்று மெச்சத்தகுந்த பேராசிரியர் ச.சு.இளங்கோ இப்போது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் ஆய்வு இருக்கைத் தலைமைப் பேராசிரியராகத் திகழ்கின்றார். பாரதிதாசனைக் குறித்து விரிவான ஆய்வுகள் செய்தவர். பல நூல்களை வெளியிட்டவர். அரிய செய்திகளை வெளிப்படுத்தி வருபவர்.

இவருடைய ஆய்வு நூல்களில் தலைசிறந்த படைப்பு ‘பாரதிதாசன் பார்வையில் பாரதி’(1982) . இந்த நூல் தான் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முறையாக இவ்விரு பெருங்கவிஞர்களின் ஆன்ம நெருக்கத்தைத் தமிழருக்கு உணர்த்தியது.

தமிழர் 1906 இல் எந்தெந்தத் தமிழ்ச் சொற்களை அறிந்திருந்தார்கள்– அந்தச் சொற்களையே வைத்துப் பாடினார்.

1906 இல் தமிழர் இருந்த அடிமைநிலையை விலக்க,
அவர்கள் மீட்சி நிலையை அடைய அவர்கட்கு எக்கருத்தைப்
பாட வேண்டும் - அக்கருத்தை வைத்துப்பாடினார்.

எவ்வளவு பெரிய உள்ளம் வேண்டும் - அவ்வளவு பெரிய
உள்ளத்தைக் கொண்டு பாடினார்.

(ஆனந்த விகடன் 3. 5. 1964)

என்று பாரதிதாசன் பாரதியை உணர்ந்து சொல்லிய சொற்களைக் கொண்டு தொடங்கும் இந்நூல் இரு மகாகவிகளின் நினைவுக்குச் சூட்டிய வைர மாலை.

பாரதிதாசன் ஆய்வில் இன்று முனைப்போடு செயற்படும் பேராசிரியர் ய.மணிகண்டன், நடுநிலை நின்று ஆயும் இளைஞர். பாரதிதாசன் படைப்புகளுக்கு ஒரு உ.வே.சா. என்று கவிஞர் தமிழன்பன் இவரை மதிப்பிட்டிருப்பது முற்றிலும் பொருத்தமானது. ஜான்சனுக்கு பாஸ்வெல் போலப் பாரதிதாசனுக்கு ய.மணிகண்டன்.

பாரதிதாசன் கவிதை இலக்கியங்களை அவற்றின் பாட பேதங்களோடு வெளியிட்டு வரும் ய.மணிகண்டன் பாரதியோடு அவர் பூண்டிருந்த நெருக்கத்தை வெளியிடும் போதும் பாரதிதாசன் பாரதியிடம் கற்றவைகளை எடுத்துக் கூறும் போதும், பாரதிதாசனைக் குறித்து கே.சுவாமிநாதன் போன்றோர் எழுதிய கட்டுரைகளை மேற்கோள் காட்டும்போதும் காட்டி வரும் பதிப்பு நேர்மை மிகவும் பாராட்டுக்குரியது.

பாரதிதாசனின் அருமைப் புதல்வர் மன்னர் மன்னனின் 'கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல்', 'பாட்டுப் பறவைகள்' ஆகிய நூல்கள் பாரதி - பாரதிதாசன் உறவுகளைச் சித்திரப்படுத்தும் வரலாற்று முக்கியத்துவம் உடையவை.

பாரதிதாசனின் முதல் தொண்டர் கவிஞர் பொன்னடியானின் நூல்கள், கட்டுரைகள், கவிஞர் முருகு சுந்தரத்தின் 'பாவேந்தம்' தொகுப்பு, கவிஞர் தமிழன்பனின் 'பாரதிதாசனுடன் பத்தாண்டுகள்' ஆகிய படைப்புகள் பாரதி - பாரதிதாசன் உறவைச் செழுமைப்படுத்தும் சான்றாதாரங்கள்.

மிகுதியும் பேசப்படாத ஓர் அரிய தமிழறிஞர், கவிஞர் முடியரசனின் நெருங்கிய நண்பரான புலவர் ஆ.பழநி. இலக்கியங்களில் நுண்பொருள் காணும் பெரும் புலமையாளர். அவர் எழுதியுள்ள அரிய நூல்களில் ஒன்று, 'பாரதிதாசன் பாரதிக்கு தாசனா?' (1989) . பரபரப்பைத் தூண்டும் ஓர் ஆய்வு நூல் இது.

ஒன்பது இயல்களால் அமைந்த இந்நூலை என்னிடம் அன்பளிப்பாக அவர் தந்தபோது தலைப்பைப் பார்த்து நான் திடுக்கிட்டேன். எனக்கு ஆ.பழநியின் கூரிய புலமை குறித்துத் தெரிந்ததனால்தான் திடுக்கிட்டேன்.

பாரதிதாசனின் மெய்த்தொண்டரான அப்பெரியோரின் ஆய்வு முடிவு வியப்பானது . வேறுபாடுகள், முரண்பாடுகள், ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்த பின் அவர் கண்ட முடிவு:

> ***நாடு, வடமொழி நூல்கள், தெய்வம் சார்த்திப் பாடுதலும் விடுதலை பற்றிய கருத்தும், பொதுவுடைமை போற்றுதல், தமிழின் தோற்றம், குறிக்கோள் வெளிப்பாடு ஆகிய ஆறு செய்திகளில் பாரதியாரோடு பாவேந்தர் வேறுபட்டும் முரண்பட்டும் நிற்கின்றார்.***
>
> ***குறிக்கோள் ஒன்று பெறுதல், மக்களைப் பாடுதல், பாடலிற் புதுமுறை புதுநடை, பெண் விடுதலை, கைம்பெண் கொடுமை,குழந்தைமணம்,சாதியொழிப்பு, இசைத்தமிழ் மறுமலர்ச்சி, பார்ப்பனிய எதிர்ப்பு, புராண நம்பிக்கையின்மை, சொன்னபடி வாழ்ந்து காட்டிய திறம் ஆகிய பதினொரு செய்திகளில் பாவேந்தர் பாரதியாரைப் பின்பற்றிச் செல்லும் தாசனாகவே விளங்குகிறார்.***

இது பாவலர் மணி ஆ.பழநியின் முடிவு. இதை ஏற்பதும் மறுப்பதும் வாசகர்களுக்கு உரிய உரிமை.

◆ ◆ ◆

பாரதிதாசனுக்குள் பாரதி என்ற இந்த நூலில் பாரதி, பாரதிதாசன் இருவரிடையே மலர்ந்த அன்பும் உறவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தமிழ், இயற்கை என்ற இரு பொருண்மைகளை இருவரும் எப்படி அணுகி இருக்கிறார்கள் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூல் இருபெருங்கவிஞர்கள் எடுத்தாண்ட பிற பொருண்மைகள் குறித்துப் பேசவில்லை. தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டு நூலை விரிவுபடுத்த உள்ளேன்.

இந்நூலின் அடிப்படையான நோக்கம் தமிழ்ச் சமுதாயம் கண்ட மாபெரும் கவிஞர்களிடையே வேறுபாடுகளையும், உயர்வு தாழ்வுகளையும் கற்பிக்காமல் அவர்கள் காண விரும்பிய தமிழர்களின் புத்தெழுச்சிக்கு நம்முடைய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று தூண்டுவதே ஆகும்.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

\- பாரதியார்

தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு

\- பாரதிதாசன்

◆

உதவிய நூல்கள் :

1. அழகின் சிரிப்பு - செந்தமிழ் நிலையம் 1990
2. எதிர்பாராத முத்தம் - மணிவாசகர் பதிப்பகம் 1991
3. தமிழியக்கம் - செந்தமிழ் நிலையம் 1954
4. பாரதிதாசன் கவிதைகள் I + II - மணிவாசகர் பதிப்பகம் 1997
5. பாரதியார் கவிதைகள் - மணிவாசகர் பதிப்பகம் 1986
6. பாரதிதாசன் கண்ட பாரதி - அன்னம் வெளியீடு 1982
7. சி.கனகசபாபதி, பாரதி - பாரதிதாசன் ஒப்பியல் திறனாய்வு அன்னம் வெளியீடு 1980
8. சிற்பி, மகாகவி - கவிதா பதிப்பகம்
9. தமிழன்பன், பாரதிதாசனுடன் பத்தாண்டுகள்
10. ஆ.பழனி, பாரதிதாசன் பாரதிக்கு தாசனா?
11. தி. முருகு சுந்தரம், பாவேந்தம், அன்னம் வெளியீடு 1990
12. ய. மணிகண்டன், பாரதிதாசன் கவிதைகள் - பொன்னி , சென்னை-91
13. ப.மருதநாயகம் , பாரதி ஆறு பாரதிதாசன் பத்து மணிவாசகர் பதிப்பகம் 2004
14. A.H.Abrams, The Mirror and the Lamp.1976
15. Bharati Dasan Critical Perspectives,M.K.University 1991.
16. C.M. Bowra, The Heritage of Symbolism 1959
17. Chellappan.K.Bharati Dasan: The Poet of a New Brave World 2008
18. Graham Hough, The Romantic Poets, 1968
19. Karl Shapiro, In defense of Ignorance, 1960